
**Laodicean Times**

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு13 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2024




**R 5552**

## ஒரு உண்மையற்ற பொருளாளரின் வீழ்ச்சி

## AN UNFAITHFUL TREASURER'S FALL

ஆதார வசனங்கள் : மத்தேயு 26:14–25, 47–50; 27:3–10.

**"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ!" – மத்தேயு 26:24.**

யூதாஸ் பாலஸ்தீனாவின் தென்பகுதியிலிருந்து வந்தவர், மற்ற பதினோரு சீஷர்களும் கலிலேயராக இருந்தனர். யூதாசின் மேலான வியாபார நோக்கமுடைய இயல்புகள், அப்போஸ்தலர்களது சிறு கூட்டத்திற்கு அவரை பொருளாளராக ஏற்படுத்தினது என யூகிக்கப்படுகிறது. இயேசுவும் அவருடைய சீஷர்களும் இராஜ்யத்தைக் குறித்து பிரகடனப்படுத்த அவர்களுடைய முழுநேரத்தையும் தரவேண்டியது அவசியமானது என்ற உண்மையை இயேசுவின் நண்பர்கள் கவனித்திருந்தனர். எனவே நாம் வாசிக்கிறபடி சிலர் தாமாகவே முன்வந்து சில பொருளாதார உதவியை அவர்களுக்கு செய்தது விசித்திரமானதல்ல.

இயேசுவும்அவருடைய அப்போஸ்தலர்களும் பணத்திற்காக கெஞ்சியிருப்பார்கள் என்றோ அல்லது பணம்சேகரிக்க உண்டியல் எடுத்திருப்பார்கள் என்றோ நாம் எண்ணக்கூடாது. அவ்வாறு செய்திருந்தால் அனைத்து பொன்னும், வெள்ளியும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரியும் எல்லா மிருகங்களும் என்னுடையவைகள் என்ற யேகோவா தேவனின் அறிவிப்பை குறைத்து மதிப்பிடுவதாக இருக்கும். மேலும் உதவிக்காக அவர் கேட்கவேண்டிய அவசியம் இருக்கும் என்பதை சுட்டிக் காட்டுகிறதாக இருக்கும். அதற்கு மாறாக, சிலர் தாமாக முன்வந்து ஆண்டவருக்கு உதவும்பொருட்டு தேவையானவைகளை அன்பளிப்பாகத் தந்தார்கள் என வேதம் கூறுகிறது. உதாரணமாக ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாள் என்பவளையும், மற்றவர்களையும் கூறலாம்(லூக்கா 8:3). அவ்விதமான தன்னார்வ அன்பளிப்புக்கள் அந்த சிறு கூட்டத்திற்கான பொதுவான பொருளாளரை ஏற்படுத்துவதை முறையானதொன்றாக்கியது. மேலும் அவர் உயர்ந்த வணிக புத்திக்கூர்மையுடையவராக இருக்கவேண்டும்.

யூதாசை இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கும்போது, அவர் மோசமான மனிதராக இருந்தார் என நாம் நம்புவதற்கு எந்த ஒரு காரணமும் கண்டுபிடிக்கமுடியாது. நாளடைவில் அதிக சாதகமான ஆதிக்கங்களின்கீழ் இருந்தும்கூட, தனக்குள்ளாக மோசமான குணத்தை வளர்த்திருப்பார் என நம்புவதற்கு நாம் ஒவ்வொரு காரணத்தையும் பெற்றிருக்கிறோம். அதாவது, இயேசு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் கூட்டத்தில் தொடர்ந்து இருந்தபோதிலும், மேலும் இராஜ்யத்தின் செய்தியானது தொடர்ந்து அவர் காதில் விழுந்தபோதிலும், அவர் தனக்குள்ளாக மோசமான குணத்தை வளர்த்தார். இதுவே அவருடைய விலகல்களுக்கு ஆரம்பமாக இருந்தது. மேலும் அவருடைய சோதனைகள் பேராசை, சுயநலம், பணஆசை என்ற ரீதியில் வந்தது என வசனங்கள் தெரிவிக்கிறது.

### "எல்லாத் தீமைக்கும் வேர்"

ஐயோ, நேர்மையான எத்தனை மனிதர்கள் பண ஆசையினால் மயங்கி, நீதியின் பாதையிலிருந்து விலகியிருக்கிறார்கள்! பரிசேயர்களுக்கு எதிராக இயேசு, அவர்கள் பண ஆசையுள்ளவர்களாயிருந்தார்கள் என்று கடுமையான குற்றச்சாட்டுகளை வைத்ததை நாம் நினைவுகூறுகிறோம். அதே போல இன்றுஅநேக கிறிஸ்தவர்களும் இதே பணஆசையினால் சிரமப்படுவது உண்மை என நிரூபிக்கப்படும்போது, அது விநோதமாக காணப்படுவதில்லை. பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்பது இன்றும் உண்மையாயிருக்கிறது (1தீமோத் 6:10). இந்தவொரு வஞ்சகத்தினால் அநேகர் தங்களை

## இம்மாத வெளியீட்டில்

.. ஒரு உண்மையற்ற பொருளாளரின் வீழ்ச்சி ... 1
.. சுவிசேஷ வலையைக் கொண்டு மீன்பிடித்தல் ... 4
.. நீதியின் விருட்சங்கள் ... 6
.. உயிர்த்தெழுதல் அற்புதங்களிலேயே மிக உயர்ந்தது .. 11
.. இயேசு அடைந்த பரிகாச சோதனைகள் ... 14

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

கவலைகளால் உருவக் குத்திக் கொள்கிறார்கள், இருந்தபோதிலும் எல்லா வேளைகளிலும் யூதாசைப் போல மிகவும் தீவிரமாக செய்வதில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

தன்னுடைய போதகரை முப்பது வெள்ளிக்காசுக்கு காட்டிக்கொடுக்கும் அளவுக்கு யூதாஸ் பணத்தை நேசித்தார். அதாவது, ஒரு கூலி அடிப்படையில் அந்த முப்பது வெள்ளிக்காசு 200 டாலர்கள் முதல் 300 டாலர்கள் வரை மதிப்புடையதாயிருந்தது. மற்றவர்கள் ஐசுவரியவான்களாகும் பொருட்டு தங்களுடைய மனசாட்சியை விற்கும் அளவிற்கு பணத்தை நேசிக்கின்றனர். சிலர் வியாபாரத்தில் செழிப்படையும் பொருட்டு பணத்திற்காக தப்பறைகளுக்கு பரிந்துபேசி, சத்தியத்தை விற்கின்றனர். சிலர் பணத்திற்காக சபையை விற்றுவிடுகிறார்கள். சிலர், பணம் ஈட்டுவதற்கும் மனிதரது அங்கீகரிப்பைப் பெறவும் தாங்கள் விசுவாசிக்காதவைகளை பிரசங்கம் செய்ய மனதாயிருக்கின்றனர். சிலர் தங்கள் தேசத்தினுடைய நலன்களை எண்ணாமல், பணத்துக்காக தங்களுடைய தேசபக்தியையே விற்கின்றனர்.

தந்திரமான பணஆசையின் தாக்கத்திற்கு எதிராக ஒவ்வொருவரும் தங்களை காத்துக்கொள்வது உண்மையாகவே மாபெரும் தேவையாக இருக்கிறது. ஆனால் நாம் பணத்திற்கும் பணஆசைக்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக பகுத்துணரவேண்டும். ஏனெனில் அது ஆத்துமாவை பொறியிலும் கண்ணியிலும் அகப்பட வைப்பதுடன், பின்னாளில் அது அழிவை ஏற்படுத்தும். பணமானது கடும் உழைப்பு மற்றும் அதைக் குவித்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. அது செய்யக்கூடிய நன்மைக்காக அது மதிக்கப்படவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அதை நேசிப்பது, அதற்கு ஊழியம் செய்வது, அதை ஒரு விக்கிரகமாக்குவது , மேலும் நம்முடைய இருதயங்களை தேவனிடத்திலிருந்து அந்நியப்படுத்த அனுமதிப்பது போன்றவற்றை நாம் செய்யக்கூடாது. யூதாசின் பயங்கரமான தோல்விக்கு இந்த பணஆசையே முதன்மையான காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**“தீர்க்கதரிசன நிறைவேறுதல்”**

பணப்பையை வைத்திருக்கும் யூதாஸ் ஒரு திருடன் என்பதை சீஷர்கள் ஆரம்பத்தில் அல்ல, பின்னாளில் அறிந்துகொண்டார்கள் எனத் தோன்றுகிறது(யோவான் 12: 6). சந்தேகத்திற்கிடமின்றி சீஷர்களின் சிறிய குழுவுக்கு ஆதரவளிக்க பங்களித்த பணத்தை ஒதுக்கும்போதுகூட, யூதாஸ் சில நம்பத்தகுந்த சாக்குப்போக்கை கொண்டிருக்கக் கூடும். ஏனெனில் பாவம் எப்போதும் வஞ்சனையுள்ளது. “நமது குருவுக்கும் நமக்கும் பணத்தேவை அதிகரிக்கும் ஒரு காலம் வரும் என்று எண்ணி, ஒரு தொகையை நான் எடுத்து வைத்திருக்கிறேன். அவ்வேளையில் எனது வருங்கால தொலைநோக்கு ஏற்பாட்டின் பார்வையை மதிப்பீர்கள்” என்று சந்தேகத்திற்கிடமின்றி அவர் கூறியிருப்பார். இந்த விஷயத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்ததினால் பணத்தின் மீதான அவரது ஆசையை அதிகரித்து, அவரது சுறுசுறுப்பான வணிக மனதானது இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் சதித்திட்டத்தை தீட்ட வழிவகுத்தது.

இயேசுவானவர் கண்டனம் செய்யப்பட்டதை யூதாஸ் உணர்ந்ததும், தன் செயலுக்காய் மனம் வருந்தியதோடு, தன்ஒப்பந்தத்தை செய்யாமல் இருக்க விரும்பி, பிரதான ஆசாரியரிடம் பணத்தை திரும்பக் கொடுப்பதற்காக சென்றார் என்று பதிவுகள் உள்ளன. அவர்கள் அவரைப் பார்த்து நகைத்து, அவர் குற்றமற்ற இரத்தத்திற்கு துரோகம் செய்திருந்தால் அது அவர்களுடைய கவலையல்ல, அது உன்னுடைய சொந்தக் கவலை என்று கூறிவிட்டனர். ஏனெனில் திரும்பப்பெற்ற இந்தப் பணம், “இரத்தப் பணம்” ஆகும் என்பதால் அதை ஆலயக் கருவூலத்தில் மீண்டும் வைக்கமுடியாது என்றனர். அதற்கு பதிலாக அவர்கள் ஒரு குயவனுடைய நிலத்தை மலிவான விலைக்கு வாங்கி, அந்நியர்களைப் புதைக்கும் இடமாக்கினார்கள். இவ்வாறாக அவர்கள் தாங்கள் மறந்துவிட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினர் . “இஸ்ரயேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று” – மத்தேயு 27:9–10.

இயேசுவானவர் மரணஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதை யூதாஸ் கண்டு ஆச்சரியமடைந்தார் என்று இவ்வசனப்பகுதி குறிப்பிடுகிறது. இயேசு ஒரு தீவிரமான சோதனைக்குள் கொண்டுசெல்லப்பட்டு, பின்பு தாமே மேசியா என உறுதி செய்வதோடுகூட, தம்முடைய எதிரிகள்மீது வெற்றிகொள்வார் என அவர் உறுதியாக யூகித்திருந்தார். இவ்வாறு யூதாஸ் தான் பங்குபெற இருக்கிற இராஜ்யத்தை ஸ்தாபிக்க துரிதப்படுத்துவதாக ஒருவேளை சிந்தித்திருக்கக் கூடும். “நல்லது, வெறும் முப்பது வெள்ளிக்காசு நமக்கு முன்பாக இருக்கிறது, காரியங்களை சீக்கிரமாக முடிவுக்குக் கொண்டுவந்ததற்காக நீங்கள் எனக்கு நன்றி சொல்வீர்கள்” என்று இறுதியில் அவருடைய மனவருத்தத்தை இப்படியாக தெரியப்படுத்தியிருப்பார். அவ்வகையில் தன்னை ஒரு கதாநாயகனாக காண்பித்தும், தன்னுடைய வியாபார அறிவை வெளிப்படுத்தியும், இராஜ்யத்தில் உன்னதமான, பொருத்தமான பொருளாளராக தன்னை காண்பித்திருப்பார். ஆனால் இவைகளோடுசேர்த்து கூடுதலாக, மரியாளின் அந்த பரிமளத்தைலத்தை குரு மதிக்கும் விதமாக, அவளது நடத்தையை அங்கீகரித்ததைக் குறித்தும் யூதாஸ் கண்டிப்பாக சிறிது கோபமடைந்திருப்பார். அந்த வெறுப்பின் தூண்டுதலினால், அவர் இயேசுவைக் காட்டிக்கொடுக்க, ஆசாரியர்களையும் சதுசேயர்களையும் சந்தித்து பேச நாடினார்.

**மறக்கப்படுதல் – உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இல்லை**

நாம் இங்கு யூதாசின் செயலுக்குரிய காரணவிவரத்தை பரிந்துரைக்கிறதில்லை. தேவனுக்கும் அவர் நிமித்தமாகவும் செய்யப்பட்ட துரோகத்திற்கு எந்தவித மன்னிப்பும் தரப்படமுடியாது. மீறுதல் செய்கிற ஒவ்வொருவரும் முதலாவது தன்னுடைய மனதில் தவறான போக்கிற்கு சம்மதம் தெரிவிப்பார் என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்டுகிறோம். வேறுவகையில் சொல்லவேண்டுமெனில், பாவத்தின் ஒவ்வொரு அடி எடுக்கும் முன்பாக சிந்தையும் மனசாட்சியும் நல்வழியிலிருந்து திருப்பப்பட்டுவிடும். இதன் காரணமாகவே, "ஆகிலும் மனுஷகுமாரன் யாரால் காட்டிக்கொடுக்கப்–படுகிறாரோ அவனுக்கு ஐயோ! அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்" என்ற இயேசுவின் இந்த வார்த்தைகளானது முழுவதும் நியாயமானதாக இருக்கிறது –மத்தேயு 26:24.

தன்னுடைய நண்பரை, தன்னுடைய போதகரை, தேவனுடைய குமாரராக தான் ஏற்றுக்கொண்டவரை, மேலும் அவர் மூலமாக மேசியாவின் இராஜ்யத்தை எதிர்பார்த்திருந்த அவரை காட்டிக்கொடுத்து துரோகம் செய்வது, அத்தகைய விருப்பம் மிகவும் மோசமான வகையிலான துரோகமாகும். மற்ற எல்லா அப்போஸ்தலரோடுகூட யூதாசும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவும், அவருடைய பாடுகளிலும் சோதனைகளிலும் பங்காளியாக இருக்கவும், சத்தியத்திற்கு உண்மையுள்ளவராக இருந்து மனிதரால் தவறாக புரிந்துகொள்ளப்படவும், உலகத்தை ஆசீர்வதிக்கும் பரலோக இராஜ்யத்தில் தம்முடைய குருவோடு பங்குபெறும் பொருட்டு அழைக்கப்பட்டிருந்தார். மற்றவர்களோடு சேர்ந்து யூதாசும் இயேசுவின் நாமத்தில் இயங்கும் தேவவல்லமையின் மூலம் இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, பிசாசுகளைத் துரத்தி, வியாதியஸ்தரை சொஸ்தப்படுத்தியிருந்தார். அவர் இரட்சகரோடுகூட தொடர்ந்து இருந்ததுடன், அவருடைய பரிசுத்தமான வாழ்க்கையைக் குறித்தும் தேவனுக்கு முன்பாக அவர் உண்மையாக இருந்ததையும் அறிந்திருந்தார். எனவே, இந்த எல்லாக் காரியங்களும் அவருக்கான பொறுப்புணர்வையும் அவருடைய குற்றஉணர்வையும் உருவாக்கியிருந்தது.

யூதாஸ் தற்கொலை செய்துகொண்ட உண்மையானது, இயேசுவின் வார்த்தைகளின் நிறைவேற்றத்தைக் காட்டுகிறது. அதாவது, தான் பிறவாமலிருந்தால் நல்லது என்று யூதாஸ் எண்ணினான்.தற்கொலைசெய்துகொள்கிறஒவ்வொருவருக்கும் இந்த உண்மையே பொருந்தும். ஆனபோதிலும் அறியாமையினால் தற்கொலை செய்கிறவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில் கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்ததால், மற்றவர்களோடுகூட அவர்களும் , கண்டிப்பாக ஆசீர்வாதத்தை அடைவதுடன், நித்திய ஜீவனுக்கான வாய்ப்பை அதன் பலனாக பெறுவார்கள்.

ஆனால் யூதாசின் விஷயத்தில் அப்பேர்ப்பட்ட சிலாக்கியங்களையும், வாய்ப்புக்களையும், அறிவையும் ஏற்கனவே அனுபவித்திருந்தார், மேலும் அந்த வெளிச்சத்திற்கும் அறிவிற்கும் எதிராக பாவம் செய்தபடியால், இவையனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. அவர் தன்னுடைய சொந்த இடத்திற்கும், தன்னுடைய பொருத்தமான இடத்திற்கும் சென்றுவிட்டார் என்ற இக்கூற்றானது யூதாசோ அல்லது வேறு எவரும் பாவத்தின் தண்டனையாக நித்திய வேதனை அடைவர் என்பதை அர்த்தப்படுத்தாது. மாறாக, அவர் உயிர்த்தெழுதலுக்கான வாய்ப்பு இல்லாமல், நம்பிக்கையற்ற மறதி நிலைக்கு, மறக்கப்பட்ட தன் சொந்த ஸ்தலத்துக்குச் சென்றுவிட்டார். அவர் ஒரு இயல்பான முரட்டு மிருகத்தைப் போன்று மரித்துவிட்டார். அவ்விதமான சிலாக்கியங்களை அனுபவித்த அவ்விதமான குணமுடையவர்க்கு ஏதாவது எதிர்கால வாய்ப்பு ஏன் இருக்கவேண்டும் என்று வாதத்தைக் காட்ட முடியவில்லை.

**இரு பதிவுகளின் இசைவு**

யூதாசின் முடிவைப்பற்றி, அவர் தன்னைத்தானே தூக்கிலிட்டுக்கொண்டார் என ஒரு வசனம் கூறுகிறது(மத்27 :5). மற்றொரு வசனம் அறிவிப்பது என்னவெனில் ; "அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான். அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று" – அப் 1:18என்று கூறுகிறது. இந்த இரண்டு வசனப்பகுதிகளையும் இசைவாக்குவது மிகவும் எளிதானது. இரண்டுமே உண்மைதான். தன்னைத்தானே தூக்கிலிட்டுக் கொள்வதற்காக, அங்கே தன்னுடைய நோக்கத்தை சுலபமாக நிறைவேற்றி முடிக்கும்படியாக, சரிந்து தொங்கும்படியாக ஒரு மரத்தின் கிளையைத் தேர்வு செய்திருக்கலாம். ஒருவேளை அழுத்தத்தின் காரணமாக கயிறு அறுந்திருந்தால், அவர் தலைகீழாக விழும்படி நேர்ந்திருக்கும் என நம்மால் உணரமுடிகிறது.

இருந்தபோதிலும், அவருடைய மரணம் சிறிதளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், அவருடைய ஆத்துமா எப்படி மரித்தது என்பதே. அதில் அவர் தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலுமான உறவை இழந்ததுடன், எதிர்கால ஜீவனுக்குரிய நம்பிக்கையையும் இழந்தார். என்றாலும் குருவானவர் கடைசிவரை அவரிடத்தில் தயான குணமுடியவராகவே இருந்து, அவர் மனந்திரும்பவும் , தன் படிகளைத் திரும்பவும் அடையவும், கடைசி செயலுக்குச் செல்லும்வரை அவருடக்கு ஒவ்வொரு வாய்ப்பையும் அளித்தார்.

உண்மை என்னவெனில், பன்னிரெண்டு பேரில் ஒருவர் இயேசுவைக் காட்டிக்கொடுப்பார் என்று தேவன் ஆதிமுதல் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். இரத்த பணத்தை வைத்து ஒரு நிலத்தை வாங்குவார் என்று ஏற்கனவே தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டிருந்தது. யூதாசினுடைய சொந்த வீழ்ச்சியில் அவருடைய பொறுப்பை மாற்றியமைக்க முடியாது என்றும் தேவன் அறிந்திருந்தார். தேவனுடைய முன்னறிவு யூதாசை காயப்படுத்தியிருக்கவில்லை. மாறாக அவருடைய சொந்த தவறான பாதையே ஆகும். இவ்வாறே எல்லாருடனும் இருக்கிறது. ஆதிமுதல் தேவனுடைய முன்னறிவுன்படி எது

கடந்துபோக அனுமதிக்கப்பட்டிருந்தாலும், நமக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில் நம்முடைய சொந்த விருப்பத்தின்பேரில் பேராசைக்கும், பாவத்திற்கும் அடிபணிந்து, நாம் என்ன செய்வோம் என்பதை மட்டுமே தேவன் அறிந்திருக்கிறார்.

யார் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவர் என இயேசுவானவர் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற சாட்சியானது, யூதாசை தேர்ந்தெடுக்கும் சமயத்திலேயே அறிந்திருந்தார் என்பதை நிரூபிக்காது. அவருடைய சீஷர்களில் ஒருவர் அவரைக் காட்டிக்கொடுப்பார் என்று வேதம் அறிவிப்பதை அவர் அறிந்திருந்தார். பாவம் மற்றும் பேராசையை நோக்கி யூதாஸ் விலக ஆரம்பிக்கும்போது, இந்த ஒரு துரோகச்செயலைச் செய்பவர் இவறாகத்தான் இருக்கமுடியும் என இயேசு அறிந்துகொண்டார். என்றாலும், இயேசுவின் நடத்தையானது யூதாசை தவறுசெய்ய வழிநடத்தினது என்று ஒரு வார்த்தையும் அர்த்தப்படுத்துவதில்லை, மாறாக அவரை முன்னெச்சரித்தது என்று பார்க்கிறோம்.

---------

**R 5553**

## உன் சிலுவையை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்று

### TAKE UP THY CROSS AND FOLLOW CHRIST

**“ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்,அவன் தன்னைத்தான் வெறுத்து,தன்சிலுவையை எடுத்துக் கொண்டுஎன்னைப் பின்பற்றக்கடவன்”–மத்தேயு 16:24.**

இவ்வசனம் மிக அழகானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒன்று. “என் பின்னே வா(come after me)” என்று ஆங்கில வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட வார்த்தைகள், தமிழ் வேதாகமத்தில் “என்னைப் பின்பற்று” என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முற்காலங்களில் ஒரு ஆசிரியர், தன் சீஷர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தாரை உடையவராயிருந்து, அவரைப் பின்பற்றுவது வழக்கமாயிருந்தது. சாக்ரடீஸ் செய்தது இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவ்வாறே நம் கர்த்தருடைய சீஷர்கள், மாணவர்கள் அவரைப் பின்பற்றினர். அவரது உதடுகளிலிருந்து அறிவுரையைத் தொடர்ந்து பெறுவதற்கான வாய்ப்பை அவர்கள் அடைவதற்கு, அவர்கள் அவரோடு பிரயாணம் செய்தனர். முற்காலங்களில் அனைத்து ஆசிரியர்களும் அவ்வாறே செய்தனர். சில சமயங்களில், கமாலியேலின் விஷயத்தில் நடந்ததுபோல, அவர்கள் ஒரு பள்ளியை உடையோராயிருந்து, மாணவர்கள், “கமாலியேலின் பாதத்தருகில்” அமர்ந்திருந்தனர். இன்றைய நாளில் நாம் “பெத்தேலின்” மேஜையில் செய்வதுபோல், அவர்கள் வினாக்களை கலந்தாய்வு செய்தனர். மாணவர்கள் கேள்விகளை எழுப்பி, ஆசிரியரின் கருத்துக்களைப் பெறுவது அவர்களுடைய வழக்கமாயிருந்தது.

தாம் போதித்திருந்தவர்களில் யாராகிலும் ஒருவர், தான் கடினமான அனுபவங்களை பெறப்போவதை ஆரம்பத்திலேயே அறிந்திருப்பார்; அவர் உயரிய கனத்தை அடையமாட்டார் என்று இயேசு கூறினார். அதற்கு எதிர்மாறாக, அவருடைய சீஷர்களாக இருக்கவிரும்புவோர், அவர்களுடைய சிலுவையைஎடுத்துக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். பிரயாணம் முழுவதுமாக சோதனைகள் இருக்கும் என்று அவர் அவர்களுக்குக் கூறினார். தவறான புரிதலின்கீழ் எவராகிலும் சீஷர்களாவதை கர்த்தர் விரும்பவில்லை.“நான் எங்கேயோ, அங்கே என் சீஷனும் இருப்பான்” இந்த கண்ணீரின் பள்ளத்தாக்கில் இயேசுவைப் பின்பற்றுவோர், தேவனுக்கும் சத்தியத்துக்கும் சாட்சியாயிருந்து, அவரால் ஆசீர்வதிக்கப்படுவதோடு, இறுதியில் அவரது மேசியாவுக்குரிய மகிமை கனம் மற்றும் அழியாமையில் பங்குபெறுவர். ஆனால் அவரது மரணத்திற்குள் மூழ்கி, அவரது பாத்திரத்தில் பங்கு பெறாவிடில் அவரது ராஜ்யத்தில் நாம் பங்குபெறமுடியாது.

--------

**R 5554**

## சுவிசேஷ வலையைக் கொண்டு மீன்பிடித்தல்

### CATCHING FISH WITH THE GOSPEL NET

**“இயேசு அவர்களைக் கண்டு...என் பின்னே வாருங்கள்,உங்களைமனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன் என்றார்”–மத்தேயு4 : 18,19.**

நம் கர்த்தர் பேசின உவமைகள், உருவக பாஷைகள், கருகலான பேச்சுக்கள், மற்றும் நம் பாடத்தின் திறவுகோல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, “...உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்ற வாக்கியம் ஆகியவைகள், பொதுவாக அவருடைய ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படுகிற சம்பவம், கர்த்தர் கலிலேயாக் கடலில் பிரசங்கித்துக்கொண்டிருந்தபொழுது, ஜனக்கூட்டம் அவரிடத்தில் நெருங்கினபடியால், ஒரு படகில் ஏறினார்( லூக் **5:1–11)**. அந்தப் படகு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானால் மீன்பிடித் தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த பிரசங்கத்தை முடித்தவுடன், “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி, இந்த மனிதரை தம் சீஷர்களாகும்படி இயேசு அழைத்தார்.

“மனுஷர்களைப் பிடிக்கிறவர்கள்” என்ற கூற்று சுவிசேஷயுகப்பணியினை விளக்கும் நல்ல அம்சங்களைக் குறிப்பிடுகிறது. மீன் பிடிப்பதில் வெற்றியடைவதற்கு கவனம்

மிக அத்தியாவசியமாக செயல்படுத்தப்படவேண்டும். எவ்வகையான மீன்கொக்கி பயன்படுத்தவேண்டும், அந்தக் கொக்கியில் எவ்வகையான இரை பொருத்தப்படவேண்டும் என்று ஒரு திறமையான மீனவர் கற்கிறார். பின்பு அவர் தனியாக மீன்பிடிக்கும் பணியைச் செய்கிறார். அவ்வாறே ஜனங்களிடத்தில் பேசுவதன்மூலம் நிறைவேற்றுகின்ற இந்த யுகத்தின் பெரும்பாலான வேலைகள், ஒரு தனிப்பட்ட வேலையாகவே இருந்திருக்கின்றன. இதில் ஈடுபட்டிருப்போர், பரத்திலிருந்து வருகிற ஞானத்தைத் தேடி, ஜனங்களுக்கு மிக உதவிகரமாயிருக்கும்படி, சுவிசேஷத்தால் பிடிக்கப்படும்– வகையில் செய்தியளிக்கவேண்டும்.

சுவிசேஷ யுகத்தின் வேலையை குறிப்பிடுவதற்காக கர்த்தர் மீன்வலை உவமையை பயன்படுத்துகிறார். கடந்த 18 நூற்றாண்டுகளாக உலகம் முழுவதும் சுவிசேஷ மீன்வலை விரிக்கப்பட்டு வருகிறது. இது எல்லா மீன்களையும் பிடித்திருக்கவில்லை. தேவன் தயவு காண்பிக்கும்படி விசேஷமாகத் தெரிந்தெடுத்த, பூமியின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே அது விரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு வலை முழுவதுமாக நிரப்பி இழுக்கிறார். இந்த யுகத்தின் முடிவில் இந்த மீன்களை பிரித்தல் நடைபெறும் என்று கூறுகிறார். அதில் தகுதியற்ற சிலவற்றை மீண்டும் கடலில் போடுகிறார், மற்றவைகளை தக்கவைக்கிறார். இந்த யுக முழுவதிலும் சுவிசேஷத்தால் இழுக்கப்பட்ட சிலர், தேவனுடைய வேலையில் பொருத்தமற்றவர்களாகக் காணப்படுகிறபடியால், தேவன் தெரிந்தெடுக்க விரும்பாதவர்களாக இருக்கின்றனர். ஆகவே அப்படிப்பட்டவர்கள் தங்கியிருக்கும்படிக்கு அவர் அவர்களுக்கு காரியங்களை மிகவும் தெளிவாக்கவில்லை. அதற்கு மாறாக, அப்படிப்பட்டவர்கள் சத்தியத்தைத் தள்ளி, விலகும்பொருட்டு, சில பாடங்களை கருகலாயிருக்கும்படி விட்டுவிட்டார்.

**அறுவடை வேலையின் இயல்பு**

இருப்பினும், சுவிசேஷ யுகமுடிவில் மட்டுமே சிலவகையில் பொருந்துவதாகக் காணப்படுகிற, கர்த்தருடைய ஜனங்களை மனுஷரைப் பிடிப்போராக குறிப்பிடுகிற இந்த மீன்வலை உவமையைத் தவிர, மற்றொரு வேலை உள்ளது. கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய பொதுவான பணி இன்றைய நாளுக்கு பொருந்துகிறது.

அது பற்றி, ‘‘கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்குவிடுதலையையும்,கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்’’– ஏசாயா 61: 1–3 என்று வாசிக்கிறோம்.

இயேசு ஜனங்களிடத்தில் பேசுகையில் அவர் சில கருத்துக்களைத் தெரிவித்தார். மேலும் சில உவமைகளை முன்வைத்தார், அவற்றை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று வாசிக்கிறோம். உதாரணமாக, மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணாதிருந்தால், அவர்களுக்குள் ஜீவன் இராது என்று கூறியிருந்தார். இந்த போதனையை யாரால் ஏற்றுக் கொள்ளமுடியும் ? என்று அவர்கள் கூறினர். ஆகவே அவர்களால் இனியும் அவரோடு நடக்கமுடியாமற்போனதால், அவர்கள் வலையிலிருந்து வெளியேறினர். இந்த யுகம் முழுவதும் கர்த்தர் மீன்வலையில் மீன்களைச் சேர்த்துக்கொண்டே வருகிறார். ஆனால் தெரிந்தெடுக்கும் மாபெரும் பணியானது இந்த யுகமுடிவில் நிறைவடையவிருக்கிறது. இந்த யுகத்தில் ஒரு குறிப்பிட்ட அளவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சுவிசேஷவலையில் பிடிக்கப்பட்டு, சத்தியத்தின் செல்வாக்கின்கீழ் அதிகஅளவிலோ அல்லது குறைந்தஅளவிலோ கொண்டுவரப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் இராஜ்யத்திற்கு தகுதியடையவில்லை. அப்படிப்பட்டவர்களிடத்தில் இரக்கமற்ற தன்மையைக் காண்பிக்காமல், தற்போது அவர்களுக்கு பொருந்தாத இடத்திலிருந்து கர்த்தர் அவர்களை ஒதுக்கிவைக்கிறார்.

இந்த ஒப்பீடு இந்த விஷயத்தை பூரணமாகக் குறிப்பிடுவதாக நாம் நினைக்கக்கூடாது. ஆனால் இது சம்பந்தமாக பயனுள்ளதாக இருக்கும்படிக்கு ஒரு உதாரணத்தின் வல்லமையை அது பெற்றுள்ளது. மீன் பிடிப்பவர் மீனைப் பிடிப்பதுபோல், நாம் மனுஷரை நிஜத்தில் பிடிக்கமுடியாது. ஒரு தூண்டில் அல்லது இழுவை வலை மூலம் மீனை தண்ணீரிலிருந்து வெளியே எடுப்பதில் மீனவர், ஓரளவு தீங்கு செய்கிறார். இழுவை வலையிலிருந்து எடுக்கப்பட்ட அந்த மீன், எவ்விதத்திலும் கனப்படுத்தப்பட்டதில்லை. சுவிசேஷ மீன்பிடித்தல் எப்படி நடக்கிறது என குறிப்பிடுவதற்காக மட்டுமே நம் கர்த்தர் இந்த உதாரணத்தைப் பயன்படுத்துகிறார். அவரைப் பின்பற்றுபவர்கள் ராஜ்யத்துக்கான மனிதர்களுக்காக மீன்பிடிக்கவேண்டும். அது அவர்களுக்கு காயமேற்படுத்த அல்ல, நன்மை செய்யவே. மீன் பிடிப்போர் மிகுந்த ஜாக்கிரதையை கடைப்பிடிக்கவேண்டும். மீன் பிடிக்கும்போது அவர்கள் தங்களை மறைத்துக்கொள்வது வழக்கம், இதனால் மீன் அவர்களைக் காணமுடியாது, இரையை மட்டுமே காணும். அவ்வாறே சத்தியத்துக்கு மனிதரை இழுக்கும்போது, நம்மை நாம் மறைத்துக்கொண்டு, நாம் கையாள்கிறவர்களுக்குப் பொருந்தும்படியாக, தேவனுடைய வார்த்தையின் அம்சங்களை இரைவீசுவதுபோல் கொடுக்கவேண்டும்.

நிகழ்காலத்திற்கு வரும்போது, இந்த சுவிசேஷ செய்தி இன்னும் அனுப்பப்படுகிறதா ? அல்லது மீன்கள் அனைத்தும் பிடிக்கப்பட்டு, சுவிசேஷ வலை கடற்கரைக்கு

இழுக்கப்பட்டாயிற்றா ? ஏற்றுக்கொள்ளப்பட வேறொன்றும் அங்கே இல்லையா ? என்ற கேள்வி எழக்கூடும். அப்படி நாம் புரிந்துகொள்ளவில்லை என நாம் பதிலளிக்கிறோம். நாம் இந்த யுகத்தின் அறுவடையின் கீழ் இருக்கிறோம் என்று நம்புகிறோம், முழுமையாக யுகத்தின் முடிவில் இல்லாவிட்டாலும் இது மிக சமீபமாயிருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

**நம் தற்கால மனப்பான்மை**

யூத யுகத்தின் அறுவடையை நோக்கிப்பார்க்கும்போது, வார்த்தையின் ஒரு அர்த்தத்தில் அது 40 வருடகாலம் நீடித்ததை நாம் காண்கிறோம். ஆயினும், அந்த 40 வருடங்களின் துவக்கம் நிச்சயமற்ற ஒன்றாக இருந்தது, அதன் முடிவும் ஆறு மாதங்கள் நீடிப்பதாக ஒருவேளை காணப்படுகிறது. நம் கர்த்தரின் ஊழியத் துவக்கத்தில், 40 நாட்கள் அவருக்கான சோதனை வந்தது, அதன்பிறகு, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் ஒன்றிணைக்கப்படுவதற்கான நேரமும் வந்தது. ஒரு வருடத்தில் மிகக்குறைந்த முக்கியத்துவமே நிறைவேற்றப்பட்டிருந்தது. அவருடைய அனுபவங்களை அடையாளமாக நாம் கருதுவோமானால், அறுவடையின் ஆரம்பப்பகுதி மிகவும் துல்லியமாக குறிக்கப்படவில்லை என்று நாம் கருதமுடிகிறது. அறுவடைப்பணிகள் மேம்பாடு அடைந்தபோது, அது அதிகரித்ததுபோல் காணப்பட்டது, எருசலேம் அழிவுக்குள்ளாகும் வரை உச்சநிலையை அடையவில்லை. இந்த உண்மையானது, அங்கே அறுவடையில் ஆறுமாதங்கள் அதிகமாயிருக்கும் என்ற ஆச்சரியத்திற்கு நம்மை நடத்துகிறது.

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பது நமக்கு நல்லது என்பதையும், நாம் அனுபவங்களை அடைவது நமக்கு நல்லது என்றும் கர்த்தர் தெளிவாகக் கண்டார். இந்த அனுபவங்கள் சிறப்பானவை. நாம் பெற்றுவருகிற காரியங்கள் நமக்கு மிகுந்த புத்துணர்ச்சியூட்டுகிறது. அவை ஆறு மாதங்கள் நீடிக்குமானால், அல்லது ஆறு வருடங்கள் தொடருமானால், அவருடைய நற்குணத்தைப்பற்றி சாட்சியமளிக்கும் இந்த நீண்ட வாய்ப்பை நமக்கு வழங்கியதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோம். மறுபுறத்தில், கோதுமை மணியை அறுவடைசெய்யும் வேலை முழுவதும் நிறைவேறியிருந்தால், தற்காலத்தின்பணி, திரள்கூட்டத்து வகுப்பாருக்கும் உலகத்துக்குமானதாக இருக்கலாம்.

''ஆகவே நாங்கள் அறியாமலேயே செல்கிறோம்,
முடிந்தால் நாங்கள் செய்யாமலிருப்போம் ;
வெளிச்சத்தில் தனியாகச் செல்வதைக் காட்டிலும்,
இருளில் தேவனோடுகூட நடப்போம்;
தரிசித்து தனித்து செல்வதைக் காட்டிலும்,
விசுவாசித்து அவரோடுகூட நடப்போம்''

சுவிசேஷ யுகத்தின் நிறைவு தற்போது நம்மீது உள்ளது. அதிசயிக்கத்தக்க காரியங்களை, மகிமையான காரியங்களை நாம்எதிர்நோக்குகிறோம். புறஜாதியாரின் ஆதிக்கம் முடிவடையும் காரியம் தற்போது விசேஷமாக கவனிக்கப்படுகிறது. தேசங்கள் சிதைவுறுதல் சமீபித்திருக்கிறது. மேலும் அந்த சிதைவுறுதல் மேசியாவின் இராஜ்யம் நிறுவுவதற்கு முன்பு நிகழும்.

கர்த்தருடைய பிள்ளைகள் எந்தநேரத்தில் திரைக்கு அப்புறம் எடுக்கப்படுவார்கள் என்பதை கர்த்தர் முழுமையாக சுட்டிக்காட்டவில்லை. ஆனால் அவர் வெளிப்படும்போது, அவருடைய எபிப்பானியா(தெளிவான அறிகுறிகள்) நிகழும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாக இருப்போம், அவரோடுகூட இருப்போம் என்ற நிச்சயத்தை நாம் அடைந்திருக்கிறோம். திருச்சபை அவரோடு இணையும்வரை ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் அவருடைய மாபெரும் பணியை அவர் துவங்கமாட்டார். இது எதைக் குறிப்பிடுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளாதிருக்க கூடும். ஒருவேளை நம் கர்த்தரோடுகூட இருந்து, சிறிதுநேரம் திரையின் இப்புறத்தில் ஊழியம் செய்யலாம். நாங்கள் அப்படி நினைத்திருக்கவில்லை. ஆனால் கர்த்தருடைய சித்தம் நிறைவேற்றப்படும் என்று நாங்கள் வெறுமனே விரும்புகிறோம். மேலும் அவருடைய பராமரிப்பின் அறிகுறிகள் எதுவாயிருப்பினும் அவைகளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

''நமக்கு என்ன காத்திருக்கிறது என்று நமக்குத் தெரியாது,
தேவன் நம் கண்களை கருணையுடன் மறைக்கிறார்
மேலும் முன்னோக்கிச் செல்லும் நம் வழியின் ஒவ்வொரு அடியிலும்
அவர் புதிய காட்சிகளை எழும்பச்செய்கிறார்.
அவர் நமக்கு அனுப்பும் ஒவ்வொரு மகிழ்ச்சியும்,
இனிமையும் இன்பமுமான ஆச்சரியத்தை அளிக்கிறது.
'' நமக்கு முன்னால் ஒரு படி இருப்பதை நாம் காண்கிறோம்,
நாம் காணவேண்டியதெல்லாம் அதை மட்டுமே;
பூமியின் மாயைகள் விலகி ஓடும்போது,
பரலோக வெளிச்சம் இன்னும் அதிகம் பிரகாசிக்கிறது;
மேலும் அவரது அன்பான '' பின்தொடருதல்''
அமைதியின் மூலம் இனிமையாக வருகிறது

---------

**R 5557**

## நீதியின் விருட்சங்கள்

## TREES OF RIGHTEOUSNESS

**“நீங்கள் கர்த்தாகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே,அவருக்குள்வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக” – கொலோசெயர் 2:6,7.**

நம் பாடத்தின் ஆதார வசனம் உரைக்கும் சூழலானது, சுவிசேஷ நம்பிக்கையோடு, மற்ற பல்வேறு நம்பிக்கைகளுக்கு

இடையேயுள்ள முரண்பாட்டை அப்போஸ்தலர் காண்பிப்பதாக காணப்படுகிறது. அந்த பல்வேறு நம்பிக்கைகள் ஒருவரை, சில வகையிலான விசுவாசத்தில் , சிலவகையான நம்பிக்கையில், ஒருவித வாழ்க்கையின் போக்கிற்கு நிலைநிறுத்தக்கூடும். ஆனால் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய பிரதிநிதியாக ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருப்போருக்கே விசேஷமாக அவர் முகவரியிடுகிறார். தேவன் தம் குமாரனை ஆதாமின் சந்ததிக்கு மீட்பராக இருக்கும்படி உலகிற்கு அனுப்பினார் என்றும், மனுக்குலத்தை பாவம் மற்றும் மரணத்தின் அதிகாரத்தினின்று படிப்படியாக மீட்பார் என்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துஇயேசுவுக்குள் இருக்கிற அனைவரும் இந்த புரிந்துகொள்ளுதலின் உணர்வில் அவரை ஏற்றிருக்கிறார்கள். இதுவே தேவன் அனுப்பியிருக்கிற ஒரே செய்தி; ''பரிசுத்தவான்– களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்'' இதுவே.

**தெய்வீக செய்திக்கு எதிரான மனிதசெய்தி**

அப்போஸ்தலர் பவுல் யாருக்கு எழுதினாரோ, அவர்களை இந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படியும், மேலும் இந்த பரலோக செய்தியுடன் பூமிக்குரிய தத்துவத்தை இணைக்க முயற்சிக்கவேண்டாம் என்றும் வலியுறுத்தினார். அவர்கள் கிறிஸ்துவை தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராக ஏற்றுக்கொண்டதுபோல, அவர்களுக்கு எல்லாவற்றிலும் போதுமானவராகவும் இருக்கிறார். அதாவது ''ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் மறைந்துள்ள ஒருவராக..'' கொலோ 2:3(திருவிவிலியம்). ''தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது''(கொலோ2:9) என்று ஏற்றுக்கொண்டது– போல, அவ்வாறே அவர்கள் நடக்கவேண்டும். அவர்கள் பரலோகப் போதகராக அவரை ஏற்றுக்கொண்டிருந்து, மகிமை கனம் சாவாமைக்கு வழிநடத்தும் பாதையில், அதே வழியில் மேம்பாடு அடைய அவர்கள் தொடரவேண்டும். இந்த தெய்வீக செய்தியோடு எந்த மனித போதனையும் கலப்பதற்கு ஒரு கனம்கூட அவர்கள் யோசிக்கக்கூடாது. ஏனெனில் கேட்கின்றவர்களுடைய சிந்தையில் மற்ற எந்த போதனையும், பரலோகச்செய்தியை குழப்புவதற்கு மட்டுமே ஊழியம்செய்யும்.

ஆயினும் அப்போஸ்தலர்களுடைய போதனைகளை புறக்கணிக்கவேண்டும் என்று இதற்கு அர்த்தமாகாது, ஏனெனில் அவருடைய 12 அப்போஸ்தலர்கள் திருச்சபைக்கு அவருடைய நாவுகளாக இருப்பதை, நம் ஆண்டவர் விசேஷமாக அறிவித்திருக்கிறார். ஆயினும், இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களது இடத்தை வேறு எந்த போதனையோ அல்லது மற்ற எந்த சபையோ எடுப்பதற்கு எதிரான எந்த அனுமானத்திலிருந்தும் அது நம்மைக் காத்துக்கொள்ளும். இவர்கள் பூமியில் எதைக் கட்டுவார்களோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டதாய் இருக்கும், பூமியில் எவைகளை கட்டவிழ்ப்பார்களோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று இவர்களுக்கு அறிவிக்கிறார்.

**ஆவிக்குரிய செடி வளர்ச்சியடைதல்**

இந்த வழியில் காரியத்தை தெரிவித்தநிலையில், நாம் கிறிஸ்துவுக்குள் எப்படி மேம்பாடு அடையவேண்டும் என்று காண்பிப்பதற்கு, ஒரு வலிமையான விளக்கத்தை அப்போஸ்தலர் உபயோகிக்கிறார். ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள், அவரது சரீரத்தின் அங்கமாக நடக்கின்ற சித்திரத்திலிருந்து திருப்பி, மரத்தை சித்திரமாக பவுல் அப்போஸ்தலர் நமக்குக் கொடுக்கிறார். அதற்கு வலிமையையும் நிலைத்தன்மையையும் கொடுக்கும் ஊட்டச்சத்தை அடைவதற்கு அதன் வேர் கீழ்நோக்கிச்சென்று, அதன் தண்டு மேல்நோக்கிச் செல்லும். அந்த மரத்தின் வேர்கள் கீழ்நோக்கி தள்ளப்பட்டு, மண்ணின் ஊட்டச்சத்தை உள்வாங்கும் அதே சமயத்தில், தண்டும் அதன் கிளைகளும் காற்றின் சூழலை அடைந்து, இலைகள் மூலம் தேவையான வளர்ச்சியைப் பெறுகின்றன. அவ்வாறே கிறிஸ்துவனுடைய மனநிலை, தேவனுடைய வார்த்தையிலுள்ள மாபெரும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்கிற அதேசமயத்தில், இந்த வாக்குத்தத்தங்களை தன் இருதயத்தில் மதிப்பீடு செய்வதனாலும், வாழ்வின் அனுபவங்கள் மூலமாகவும் குணாதிசயத்தை அவர் கட்டமைக்கிறார். தெய்வீகத் திட்டத்தின் அறிவுக்குள் விசுவாச வேர்கள் ஆழமாகத் தள்ளப்பட்டு குணாதிசயமாகிய மரம் உயரஉயர வளர்கிறது. தேவனுடைய பரிசுத்தஆவியின் வளமான கனிகளை வளர்த்து, முதிர்ச்சியடையச் செய்கிறது. ஏனெனில் அறிவுரையானது கட்டுமானத்தின் ஒரு வடிவமாயுள்ளது.

இவ்வாறு கிறிஸ்தவன் தன் கர்த்தரின் குணசாயலில் வளர்ந்து,அவனுடைய விசுவாச வேர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களுக்குள் ஆழமாய் இறங்கும்போது, அவன் ஸ்திரப்பட்டு, நிலைநிறுத்தப்படுகிறான். பூமியில் நன்கு வேரூன்றியிருக்கிற ஒரு மரத்தை வேரோடு பிடுங்குவது கடினம். இது ஒரு அற்புதமான வலிமையை உடையதாயும், பூமியின்மீது ஒரு அற்புதமான பிடிப்புள்ளதாயும், மேலும் அழிந்துபோக பலவருடங்கள் தேவைப்படுகிறதாயும் உள்ளது. அவ்வாறே முறையாக ஸ்திரப்பட்டிருக்கிற ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாசமும் உள்ளது. அவன் தேவனுடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களில் ஸ்திரப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டிருக்கும்போது, எந்த போதனையாகிய காற்றும் அவனுடைய விசுவாசத்தைக் கவிழ்க்கமுடியாது.

புதிதான சிலவற்றைத் தேடி, சுற்றிலும் தொடர்ச்சியாக நோக்கிப் பார்க்கிற எவரும் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டிருக்கவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்துகிறார்கள். தெய்வீகத் திட்டமானது தேவனுடைய திட்டம் என்று ஒருமுறை உறுதிப்பட்டபிறகு, அந்த ஸ்தானத்திலிருந்து விலகிச்செல்ல நம்மை நாம் அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு வேதவசனங்களில் வேரூன்றப்பட்டு, நாட்டப்பட்டிருக்கிற எல்லா கிறிஸ்தவர்கள்மீதும் நம் நாளின் கோட்பாடுகளாகிய பரிணாமம்,

கிறிஸ்தவ விஞ்ஞானம், புதிய கருத்து போன்ற எதுவாயிருந்தாலும் எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை. கிறிஸ்துஇயேசுவுக்குள் இருந்ததுபோல, ஆத்துமா சத்தியத்தில் ஸ்திரப்பட்டு நிலைநிறுத்தப்படாதவரை, எந்த கிறிஸ்தவ வளர்ச்சியும் மேம்படுவதில்லை அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை தக்கவைக்கப்படுவதில்லை.

**ஆவிக்குரிய தேய்மானத்துக்கு ஒரே காரணம்**

தேவனுடைய வார்த்தையைக் கற்று, இயேசுவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட தேவதிட்டத்தை நாம் ஒருமுறை கண்டிருந்து அவரிடத்தில் நம்மைக் கொடுத்தபிறகு, இந்த மண்ணில் நம்மை வேரூன்றச்செய்யவும் அங்கே நிலைத்திருக்கவும், உபதேசத்தில் நிலைத்திருப்பதே நம் ஆவிக்குரிய வாழ்க்கையைத் தக்கவைப்பதற்கான ஒரே வழியாகும். ஊட்டச்சத்தை நம்மால் கூடுதலாகப் பெறமுடியும், நம்மிடம் உள்ளவற்றுடன் மற்ற கூறுகளின் கலவை அனுகூலமளிக்கும் என்ற எண்ணத்துடன் மற்ற வயல்வெளிகளை நாம் தேடக்கூடாது. கர்த்தருடைய திட்டத்துடன் எந்த கோட்பாடுகளும் கலக்காது, இது முழுமையானது; மற்ற அமைப்புக்களின் விசுவாச உதவி இதற்குத் தேவையில்லை. இந்த கோட்பாடுகளுடன் மனிதருடைய கோட்பாடுகளை, யோசனைகளை இணைக்கும் எந்த முயற்சியும், அதன் மதிப்பை அழித்துவிடும். அப்படிப்பட்ட செயல்முறையால் கிறிஸ்துவுக்குள் நாம் வேரூன்றவோ கட்டப்படவோ ஒருக்காலும் முடியாது. நம் ஆவிக்குரிய சிதைவு நேரிட்டு இறுதியில் ஆவிக்குரிய மரணமே முடிவாக இருக்கும்.

தேவனுடைய எந்த பிள்ளையும் போதனையின் ஒவ்வொரு காற்றாலும் அலைக்கழிக்கப்படக்கூடாது அல்லது, வேறு ஏதாவது புதிய கோட்பாடு என்ன கற்பிக்கக்கூடும் என்ற ஆரோக்கியமற்ற ஆர்வத்தில் ஈடுபடவும் கூடாது. அவ்வாறு செய்வது ஒரு கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய தன்மைக்கு மிகவும் ஆபத்தானது. சத்தியத்தை ஒருபோதும் அறிந்திராத ஒருவர் அப்படிப்பட்ட போக்கை கடைப்பிடிப்பதில் சில காரணம் இருக்கக்கூடும், ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான சத்தியம் என்னவென்று முற்றிலும் நிரூபணமான ஒருவர், ஆகாரத்துக்காக புதிய பசும்புல் மேய்ச்சலைத்தேடி அலைவாரானால், எந்த மன்னிப்பும் கிடையாது. அவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஒருபோதும் கட்டப்பட்டிருக்கவில்லை அல்லது ஆவிக்குரிய சரிவுக்குள் அவர் விழுந்திருக்கிறார். தேவனுடைய திட்டத்திலுள்ள வேறுபட்ட அம்சங்களில், சிந்தனைக்கும் மனதுக்கும், ஆவிக்குரிய செயல்பாட்டுக்குமென வற்றாத களம் உண்டு.

ஆபிரகாமின் மூலமாக பூமியின் எல்லாக் குடும்பங்களுக்கும் ஆசீர்வாதம் வரவேண்டும் என்பதற்காக அவரது வித்தை அடைய தேவன் நோக்கங்கொண்டிருந்தார் என்று நாம் நம்புகிறோம். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக பார்த்திருப்பவர்கள், கிறிஸ்துவே ஆபிரகாமின் வித்து என்றும், அவருடைய பணி இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் என்றும் புரிந்துகொண்டனர். இந்த நோக்கத்திற்காகவே அவர் உலகிற்கு வந்தார். ஆபிரகாமினிடத்தில் ஏற்படுத்தப்பட்ட அதே வாக்குத்தத்தத்திலும், அதே விசுவாசத்திலும், தலையாகிய கிறிஸ்து இயேசு மட்டுமல்ல, அவரது சரீரமாகிய திருச்சபையும் பங்குபெறவேண்டும் என்று பின்னாளில் திருச்சபை கற்றுக்கொண்டது. அழைக்கப்படும் ஒவ்வொரு நபரும் உள்ளே வருவதற்கும், அவரது விசுவாசத்தை பயிற்சி செய்வதற்கும், கிறிஸ்துவின் சரீர அங்கமாக கட்டியெழுப்பப்படுவதற்குமான வாய்ப்பைப் பெறுகிறார். இந்த நேரத்தில் கிறிஸ்துவின் சபை கிட்டத்தட்ட முழுமையடையவேண்டும். இந்த மகிமைநிறைந்த ஆபிரகாமின் வித்தானது, பூமியின் நடவடிக்கைகளை கைப்பற்றி, ''உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும்'' வேளை சமீபித்திருக்கிறது –அப் 3:19–21.

ஒரு மரம் எல்லா நேரங்களிலும் ஒரே தனிமத்தை சுவாசிக்கிறதில்லை,மேலும் அது எப்பொழுதும் சூரிய வெளிச்சத்தால் நிரம்பி வழியாமல், அதன் வளர்ச்சிக்காக புயல்களும், மழையும்கூட அவசியமாகிறதுபோல். அவ்வாறே தேவனுடைய பிள்ளை, பரிசுத்தஆவியின் களிகளில் சிறப்பாக வளர்ச்சியடைவதற்கு, சிலசமயங்களில் மாறுபட்ட சூழ்நிலைகளும்,வேறுபட்ட அனுபவங்களும் அவசியமாயுள்ளன. அவருடைய ''மரங்கள்'' ஒவ்வொன்றிற்கும் என்ன சூழ்நிலைகள் மற்றும் அனுபவங்கள் தேவை என்று மாபெரும் திராட்சத் தோட்டக்காரர் அறிவார். எந்தளவு சூரிய வெளிச்சம், எந்த அளவு மழை, எந்தளவு குளிர், எந்தளவு வெப்பம், எந்தளவு சுத்திகரித்தல் தேவை என்றறிந்து, ஒவ்வொன்றிற்கும் ஏற்றவாறு பொருத்தமானது எதுவோ அதை அவர் வழங்குவார். வேர் விடுகின்ற மற்றும் கட்டியெழுப்பும் செயல்முறையை, பாதிப்பில்லாமல் மேம்படுத்த, இந்த நிலைமைகள் மற்றும் சூழல்களை எப்படி மாற்றுவது என்று அவருக்குத் தெரியும். இதை எப்படி நிறைவேற்றவேண்டும் என்று நமக்குத் தெரியாது, நம்மீது ஆவிக்குரிய பேரழிவையே வருவித்துக்கொள்வோம். ஆகவே திறன்மிக்க தோட்டக்காரரது பராமரிப்பின்கீழ் தொடர்ந்து நம்மைக் காத்துக்கொண்டு, அவரோடு ஊக்கமாய் ஒத்துழைப்பது அவசியமாகிறது. அதனால் நாம் வளர்ச்சியடைந்து, பலப்பட்டு, அசையாதவர்களாய் ஸ்திரமாய் உறுதிப்படுவோம்.

**வேரின் ஆழம் கனிதருதலிலும் வீரியத்திலும் காண்பிக்கப்பட்டுள்ளது**

மரத்தின் வேர்கள் ஆழமாகவும் பரவலாகவும் இருப்பதைக்கொண்டு, அதன் வீரியமும் கனிதருதலும் காண்பிக்கப்படுகிறது. ஆழமாகவும் ஸ்திரமாகவும் வேரூன்றாத ஒரு மரத்தால் வளமான, சுவையான பழங்களைத் தரவோ, குளிர்ச்சியான புத்துணர்ச்சியூட்டும் நிழலை மனிதனுக்கு அளிக்கவோ முடியாது. வேரின் ஆழம் முற்றிலும் அவசியம். அவ்வாறே ஒரு கிறிஸ்தவனின் விசுவாசம் கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேரூன்றப்படவேண்டும், இவ்வாறு

அவருக்குள் வெளியாக்கப்பட்ட தெய்வீக சித்தம் என்ன என்று அதிகமதிகமாய்க் கற்று, அவருக்குள் வளர்ச்சியடைவோமாக. வேர்விடும் செய்முறை கண்களுக்கு காணப்படாமல், வெளிப்புறமான வெளிப்பாட்டைவைத்து மட்டுமே அதை நிதானிக்கமுடியும். எங்கே செழுமையான பசுமை இருக்கிறதோ அங்கே நன்றாக வேர் ஊன்றப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே வளர்ச்சி நின்றுவிடக்கூடாது, கனியைத் தாங்கியிருப்பது அவசியமாகிறது. அவ்வாறே தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய ஜீவியமும் தன்னில் தானே கிறிஸ்துவின் சாயலை அதிகமதிகமாக வெளிப்படுத்தவேண்டும். விளக்கப்படத்தை மாற்ற, ஒரு கிறிஸ்தவன் திராட்சச்செடியில் ஒரு கொடியாக மட்டுமல்ல, மாறாக செழிப்பாக, கொத்துக்கொத்தாக பழங்களைத் தாங்கியிருந்து, வருடாவருடம் தரத்திலும் பருமனிலும் அதிக தேர்ச்சி பெறவேண்டும்.

உலகக்காரியங்களில் சிறிதே அறிவு பெற்றிருந்தாலும், ஆவிக்குரியவற்றில் ஆழமான அறிவைப் பெற்றிருந்து, தேவனுடைய ஆழமான காரியங்களுக்குள்ளான தெளிந்த நுண்ணறிவையும், செழிப்பான கிறிஸ்தவ அனுபவத்தையும் பெற்று, கிறிஸ்துவுக்குள் மிக ஆழமாக வேரூன்றி உறுதிப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களை நாம் சிலசமயங்களில் பார்க்கிறோம். ஒருவேளை கண்ணியமான சமுதாயத்தின் பயன்பாடுகளைப் பற்றிய இவர்களுடைய அறிவு, அவர்களுடைய மற்ற அநேக சகோதரர்களைக்காட்டிலும் குறைவாயிருக்கக்கூடும். இவைகளைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிவதற்கு குறைந்த வாய்ப்புக்களை மட்டுமே இவர்கள் அடைந்திருக்கலாம். ஆயினும் இவர்களுடைய கிறிஸ்துவுக்குள்ளான பழுத்தஆற்றல், உலகின் சமுதாய தரநிலைகளின்படி வெளிப்புறமாக தங்களை சரிசெய்தவர்களுக்கு அவமானத்தை வருவிக்கும். நம் நிதானிப்பின் தரநிலைகளும், குணநலன் பற்றிய நம் மதிப்பீடுகளும் ஆண்டவரது மாதிரிப்படி வடிவமைக்கப்படுவதில் நாம் எவ்வளவு கவனமாயிருக்க வேண்டும் ! நாம் மேற்பரப்புக்குக் கீழே பார்க்கிறோம். இராஜ்யத்தின் ஸ்தானம் அல்லது குணநலனுக்கான பண்பைத் தீர்மானிப்பதில், கர்த்தருடைய பார்வையில் மதிப்பற்றமாயிருக்கிற மாம்சத்தின் வெளிப்புறமான எந்த தனித்தன்மையைவிட, உண்மையும் அத்தியாவசியமான பண்புகளை நாம் கவனிக்கிறோம்.

**பிரதிபலிப்புக்கான பரிந்துரைகள்**

அடுத்த யுகத்தில் உலகின் நியாயாதிபதிகளாக நாம் இருக்கவேண்டுமானால், நம் சகோதரர்களைக் குறித்த நம் மதிப்பீடுகளில் எப்படி சரியான பார்வையை, கர்த்தருடைய பார்வையை எடுப்பது என தற்போது நாம் கற்காவிடில், இந்த ஸ்தானத்துக்கு எப்படி நாம் பொருத்தப்படுவோம் ? அவர்கள்மீதான நமது அன்பும் மரியாதையும் கர்த்தருடைய கண்களில் கவனிக்கப்பட தகுதியற்றதாயிருக்கிற காரியங்களில், அற்ப விஷயங்களால்கூட அளவிடப்படுமானால், வரவிருக்கிற யுகத்தில் நியாயாதிபதிகளாக நம்மைப் பொருந்தப்பண்ணுகிற குணாதிசய இயல்புகளை நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோமா ? இந்த எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துவுக்குள் எப்படி நாம் வளர்ச்சியடைகிறோம் ? இந்த வழிகளில் நம்மை நாமே கடுமையாக நிதானித்து, நம் ஆண்டவரைப்போலாகி, அவரது இறுதி அங்கீகாரத்தை பெறுவோமாக !

நாம் விசுவாசத்தில் உறுதிப்படவேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். "பரிசுத்தவான்களுக்கென்று ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை" என்ற இச்சொற்றொடரானது ஒரே விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது. இதையே எவ்விலை கொடுத்தாகிலும் பற்றிக்கொள்ள வேண்டும். சாத்தான் நம் சிந்தைகளை மற்ற வாய்க்கால்களுக்கு, சில புதிய காரியத்துக்கு நம் கவனத்தை ஈர்க்கும்படி திருப்ப முயற்சிப்பான். ஆனால் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டம், தேவனுடைய சத்தியம் ஒன்றே. "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக", நீதிக்கான அறிவுரையாக இது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது **(2தீமோ3:16)**. நாம் கவனமாகப் படித்து, அடித்தளமிட்டு வளருவதற்கு கடுமையாக உழைக்க, இது வடிவியல் அல்லது முக்கோணவியல் அல்லது புவியியல் அல்லது வானியல் அல்லது வேறு எந்த அறிவியலின் உண்மையாயிராமல், தேவ வசனமாயிருக்கிறது(யோவான் 17:17). இந்த மற்ற உண்மைகள் அவற்றின் வழியில் மிகச்சிறந்தவையாயிருந்தாலும், நாம் இவைகளை தற்போது கற்பதற்கு நமக்கு நேரமில்லை. சிருஷ்டிப்பின் அற்புதங்கள் எல்லாவற்றையும் கற்பதற்கு நாம் நித்தியத்துவங்களைப் பெறவிருக்கிறோம். ஆனால் தற்போது, குறிப்பாக அவருடைய பரிசுத்தவான்களுக்கு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய ஆழமான இரகசியங்களை, ஆவிக்குரிய சத்தியத்தில் தேர்ச்சியடைய நாம் பயன்படுத்தவேண்டும்.

**உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கிறிஸ்தவன் குருட்டு விடாப்பிடியன் அல்ல**

கர்த்தருடைய சரீர அங்கங்களாக அவரிடத்திலான நம் உறவிலும், உடன்அங்கங்களாக சகோதரரிடத்திலும், கிறிஸ்து மற்றும் அவரது வேலையோடும் தொடர்புடைய எல்லா வேதாகம போதனைகளையும் சத்தியம் தழுவிக்கொள்கிறது. நன்றியுணர்வோடு நாம் அதில் நிலைத்திருக்கவேண்டும். இந்த சத்தியத்தின் வேறுபட்ட அம்சங்களில் நாம் நம்மை அதிகதிகமாக பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். நம் கர்த்தர் என்ன போதித்தார், ஏன் அதை போதித்தார் என்பதில் நாம் தெளிவாக இருந்து, சத்தியத்தின் வெவ்வேறு பகுதிகளை இணக்கமான முழுமையுடன் எப்படி இணைப்பது என்று அறிந்து, முற்றிலும் தகுதியுள்ளோராய் இருக்கவேண்டும். இந்த மகிமைநிறைந்த காரியங்களை நாமே உருவாக்கவில்லை, எந்த மனிதனும்

அல்ல, கர்த்தர் தாமே இதைத் தோற்றுவித்தார் என்று நாம் கண்டு, இதை வெளிப்படுத்தின நம் தேவனுடைய அன்பின் தயவை நாம் இருதயத்தில் மதித்துணருவோமாக. அவைகள் நமக்கான தேவனுடைய கொடைகள், இந்த பெரிதான கொடைக்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருந்து, அதை விலையேறப்பெற்ற பொக்கிஷமாக வைராக்கியத்துடன் பாதுகாத்து, தேவனுடைய நாமம் மகிமையடையும்படி நம் வெளிச்சத்தை பிரகாசிக்க பண்ணுவோமாக!

தவறான போதனையை போதிக்கின்றவர்கள் மற்றும் பொதுவான உலகின் ஜனங்கள், விசுவாசத்தில் உறுதிப்படுவதன் அவசியத்தையோ அல்லது ஆலோசனையையோ நம்பாதிருந்து, உறுதிப்படுவது என்றால் குருட்டு விடாப்பிடியாக இருப்பது என்பதையே பொதுஉணர்வாக கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் சிந்தையில் நியாயமற்றவர்களா– யிருந்து, தேவ வசனத்தின் அதிகாரத்தினாலோ அல்லது தர்க்கரீதியான பலத்தாலோ, ஒருபோதும் நிரூபிக்கப்படாததை அடைந்திருந்து, அதை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் குருட்டு விடாப்பிடியர்கள் அல்லது மதவெறியர்கள் என்று சரியாக அழைக்கப்படுகிறார்கள். ஆனால் தேவன் உள்ளுணர்வில் எதைத் தூண்டினாரோ, நமது புத்திமதிக்காக தேவனுடைய வார்த்தையில் என்ன எழுதியிருக்கிறாரோ அதை உறுதியாய்ப் பற்றிக்கொள்கிற எளிமையில், குழந்தை போன்ற விசுவாசத்தில் இருக்கும். ஒருவர், மதவெறியரல்ல. மனுஷனுடைய கற்பனைகள் மற்றும் எண்ணிலடங்கா கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்ட எல்லா கட்டமைப்புகளும் வீழ்ந்திருக்கும்போது, பலமும் உறுதிப்பட்டதுமான குணநலனைக் கொண்டிருக்கிற இவர் நிலைநிற்பார். ஒவ்வொருவருடைய குணாதிசய கட்டமைப்பு எப்படிப்பட்டது என்று தற்போது நம்மீது வந்திருக்கும் மகாநாள் சோதித்துவருகிறது. ஆனால் முழுநேரக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களிலும் மிகச் சிலரே பரீட்சையில் நிலைநிற்பர்.

தேவனுடைய சத்தியத்தில் உறுதிப்பட்டிருக்கிற சிலர் மட்டுமே கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டவர்களாயும், நிலைநாட்டப்பட்டவர்களாயும், அவருக்குள் கட்டப்பட்டவர்களா–யுமிருந்து, எந்த இழப்புமின்றி, பாதுகாப்புடன் இந்த கடுமையான சோதனையைக் கடந்துசெல்வர். நிலையுறுதியுள்ள பலமுள்ள கிறிஸ்தவனுக்கும், மதவெறியனுக்கும் இடையிலான வேறுபாடு என்னவெனில், ஒருவர் சத்தியத்தில் உறுதிப்பட்டிருக்கிறார், மற்றவரோ தப்பறையில் உறுதிப்பட்டிருக்கிறார். இந்த இரு வகுப்பாருக்கிடையிலான மாபெரும் வித்தியாசம் இந்த நாளின் அக்கினியால் வெளிப்படுத்தப்படும். தகுதியுள்ளவரா அல்லது தகுதியற்றவரா என எல்லாரையும் சோதித்து பரீட்சிக்கும்வரை, இந்த அக்கினி தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கும்.

**சுய பரிசோதனை செய்வதன் முக்கியத்துவம்**

ஒவ்வொரு தேவபிள்ளையும் தான் ஆரம்பத்தில் செய்துகொண்ட தன் சொந்த அர்ப்பண உடன்படிக்கையின் காலத்தைத் திரும்பிப் பார்க்கும்படி நம் திறவுவசனத்திலுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகள் வழிநடத்துகின்றன. எந்த நிலைமையில் நாம் கிறிஸ்துவுக்குள் வந்தோம்? நாம் பாவிகளாயிருந்ததை நம் தரப்பில் ஒப்புக்கொள்வதற்கு அதிக தாழ்ச்சி தேவைப்பட்டது, நம்மை நாமே இரட்சிப்பதற்கு முற்றிலும் கூடாது என்பதை நாம் உணர்ந்திருந்தோம். சிலர் தாங்கள் துவங்கின வழியை மறந்தவர்கள்போல் காணப்படுகிறது. அவர்கள் குருவின் சாயலுக்குள் உண்மையாக கட்டப்படவேண்டும் என்ற ஆவலுடன், விசுவாசம் தாழ்மை மற்றும் சாந்தத்துடன் துவங்கினர். ஆனால் அவர்கள் இதைப் பற்றிய பார்வையை இழந்துவிடுவதுபோல் தெரிகிறது. மேலும் கிறிஸ்துவின் பூரணத்துக்குள் நேராக மேல்நோக்கிச் செல்வதை விட, வேறுபாதையில் வளரத் துவங்குகிறார்கள். உலகத்துக்கு முன்பாக சிலநிகழ்ச்சிகளைச்செய்ய அவர்கள் விரும்புகிறார்கள். இன்னும் போதனைகளைக் குறித்துப் பேசி அல்லது சுயமாக போதனைகளை உருவாக்கி, கிறிஸ்தவ மேம்பாட்டின் ஆரம்பக் கொள்கைகளை அவர்கள் அலட்சியம் செய்கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் படிப்படியாக, கிறிஸ்துவின் ஆவியிலிருந்தும், போதனைகளிலிருந்தும் தங்களை விலக்கிக் கொள்கிறார்கள். இந்த அபாயங்களுக்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்படி அப்போஸ்தலர் கூறுகிறார். கிறிஸ்துவை நீங்கள் நிஜமாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதில் உறுதியாயிருக்கிறீர்களா? நீங்கள் தேவனிடத்தில் நிஜமாகவே முழு அர்ப்பணிப்பு செய்து, புதுசிருஷ்டியாகியிருப்பதை நிச்சயித்திருக்கிறீர்களா? இதை நீங்கள் அறிந்திருக்கவேண்டும். அப்படி நிச்சயித்திருப்பீர்–களானால், நீங்கள் அவருடைய சாயலில் வளர்ச்சியடைந்திருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். கவனமாக சோதித்தறியாமலேயே நீங்கள் மேம்பாடு அடையாமலேயே, அடைந்துவருவதாக நீங்கள் எண்ணக்கூடும். குறுகிய வழி, பிரயாணம் முடியும்வரை குறுகியதாகவே இருக்கும், வெறும் வெளிப்புற பாவனையான விசுவாசம் மற்றும் குறிப்பிட்ட அளவிலான அனுசரிப்புகள் போதுமானதல்ல. நாம் நமது தோற்றத்தாலும், நம் நடையாலும், வாழ்க்கையின் எல்லாச் செயல்களாலும், வார்த்தைகளாலும் கர்த்தரை அறிக்கை செய்யவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நம்மை நாமே தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்ப்பதனால் மட்டுமே, நம் ஆண்டவர் நடந்த குறுகலான வழியில் நாம் நிஜமான மேம்பாடு அடையமுடியும். நாம் முன்னோக்கிச் செல்லும்போது, சத்தியம் பிரகாசமாகவும், முழுமையாகவும், அதிக ஒளியையும் அளிக்கும். இதற்காக நாம் வசனத்திற்கும் அவருடைய திட்டத்திற்கு ஏற்பவும் நெருக்கமாக நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். சிறியதும், வளர்ச்சியடையாததுமான முளைகளை கர்த்தர் ராஜ்யத்தில் ஏற்கமாட்டார், மாறாக அவைகள் வளர்ந்து முதிர்ச்சியடைந்து வலுவான உறுதியான நீதியின் விருட்சங்களாக வேண்டும் என்று அவர் விரும்புகிறார் –ஏசாயா 61:3.

**தேவ வசனம் மட்டுமே கட்டியெழுப்பும்**

தேவ வாக்குத்தத்தங்களை அதிகதிகமாக, ஆழமாக ஆராயுங்கள். இதை நீங்கள் செய்யும்போது, விசுவாச வேர்கள் ஊட்டச்சத்தை ஈர்த்து, அதை உங்கள் வாழ்க்கையில் அனுப்பும். ஒரு மரம் வளர்வதுபோல் நீங்கள் வளருவீர்கள். ஏனென்றால் உணவளிக்கப்பட்டு ஊட்டமளிக்கப்பட்டுள்ளது. விசுவாசத்தில் இப்படியாக மட்டுமே நீங்கள் நிலைநிறுத்தப்படுவீர்கள். உங்கள் கற்பனையிலோ மற்றவர்களின்கற்பனையிலோ அல்ல. நம் விசுவாசம் நாளுக்குநாள் அதிக வலுப்பெறவேண்டும். இது கர்த்தரைத் தவிர வேறு எதிலோ அல்லது நம்மிடத்திலோ விசுவாசம் வைப்பதல்ல. விசுவாசம் என்பது ஆரம்பத்தில் எதைக்கொண்டு தொடங்கினோமோ, நம் முன்னோக்கிய வழியில் செல்லும்போது, அதிகமான அளவில் அதிகரிப்பது தேவையாயிருக்கிறது. அதாவது தேவனிடத்திலும், அவருடைய உறுதியான வார்த்தையிலும் அதிக அளவில் வளரத் தேவையாயிருக்கிறது. இயேசு மற்றும் அவரது வாய்க்கால்களாக பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தருடைய பிள்ளைகளாக நமக்கு வந்திருக்கிற எல்லாவற்றையும் நாம் அறிவோம். இதே மேஜையில் நன்றியுணர்வோடு தொடர்ந்து உணவருந்துவோமாக.

''வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதில் மட்டும் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை, நான் வெளியே அலைய விரும்புகிறேன்,அதிக சுயாதீனத்தை நான் விரும்புகிறேன்'' என்று நமக்குநாமே கூறி, அடிமைத்தன ஆவியை நாம் உணரக்கூடாது. தேவனுடைய உண்மை புத்திரனுடைய ஆவியின் மனப்பான்மை இதுவல்ல. அப்படிப்பட்ட உணர்வுகள் உற்சாகப்படுத்தப்படும்போது, முழு ஆவிக்குரிய பேரழிவை அடையும்படி நடத்தும். அப்படிப்பட்ட சோதனைத்தூண்டுதல்கள் வருமானால், முறையாகவும் நேர்மறையாகவும் எதிர்க்கவேண்டும். இந்த மகிமை நிறைந்த தெய்வீக வெளிப்பாட்டை நமக்கு அருளியதற்காக ஆழ்ந்த நன்றியுணர்வு உடையதாகவும், ஸ்தோத்திரம் செலுத்துவதாயும் நம் ஆவி இருக்கவேண்டும். கர்த்தருடைய வழியில் இவ்வாறு பின்பற்றும்போது, ஒரே உண்மை மகிழ்ச்சியை நாம் கண்டடைவோம், ஒரே உண்மை மேம்பாட்டையும் அடைவோம். ''இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லலை'' இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்'' – 2பேதுரு 1:10,11.

---------

**R 5559**

# உயிர்த்தெழுதல் அற்புதங்களிலேயே மிக உயர்ந்தது

## THE RESURRECTION THE GREATEST OF MIRACLES

தேவன் தமது புது சிருஷ்டிப்பில், இதுவரை உருவாக்கிய எல்லாவற்றிலிருந்தும் முற்றிலும் தனித்தன்மையுடைய ஒன்றை சிருஷ்டிக்கத் துவங்கினார். புது சிருஷ்டி என்பது ஒரு பூமிக்குரிய சிருஷ்டிப்பு அல்ல. நம் புரிந்துகொள்ளுதலின்படி, அந்த புது சிருஷ்டிப்பில் பூமிக்குரிய ஜீவி எதுவும் தற்போதோ அல்லது எந்தக் காலத்திலுமோ ஒருபோதும் பங்குபெறுவதில்லை. மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கும், மனித நிலையிலிருந்து ஆவிக்குரியவற்றிற்கும் எதுவும் கொண்டு செல்லாது.

மனித ஜீவி ஏறத்தாழ சீரழிந்த நிலையிலுள்ளது. தேவனைக் குறித்தும், தெய்வீக சுபாவத்தைக் குறித்தும், பாவம் என்றால் என்ன, அது ஏன் விரும்பத்தகாததாக இருக்கிறது என்பதைக் குறித்தும், கிறிஸ்துவின் மூலம் தேவன் ஏற்பாடு செய்துள்ள மறுசீரமைப்பு குறித்தும், பரலோக ராஜ்யத்தில் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராகும் அழைப்பு குறித்தும் மனிதன் சிலவற்றைக் கேள்விப்படுகிறான். மனித வல்லமையாலும், தன் செவிகளாலும் இவைகள் எல்லாவற்றையும் குறித்த உணர்வை அவன் அடைகிறான், வேறு எந்த வல்லமையையும் அவன் பெற்றிருக்கவில்லை. அவன் கேட்கும் செவியை அடைந்திராவிடில், தெய்வீகச் செய்தியை இந்த தற்காலத்தில் அவனால் கேட்கமுடியாது. சிலர் கேட்கும் காதுகளை அதிகளவிலும், மற்றவர்கள் குறைவாகவும் பெற்றிருக்கின்றனர். கேட்கும் செவியை அதிகமாக உடைய ஒருவன், மனந்திரும்பும் பாவிகளுக்கு உதவுவதற்காக தேவன் ஒரு ஏற்பாட்டை வைத்திருக்கிறார் என்று கற்கும்போது, கூடுதல் திருப்தியும், கூடுதல் கவனமும் அடைகிறான். சீர்கேடு அதிகமாயிருக்கும்போது, கேட்கும் செவி குறைவாயிருக்கும். சீர்கேடடைந்த ஒரு நபர், இயல்பான ஜீவிய மட்டத்தில் ஜீவிக்கிறார், இதனால் தேவனிடத்தில் வருவதற்கு அவருக்கு குறைவான நாட்டமே உள்ளது. மேலும் தேவன் சொல்கிற எதையும் கேட்கின்ற காதும் குறைவாகவே உள்ளது. ஆனால் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தெளிவாக கேட்க முடியாத காதுகளை உடைய வகுப்பார், விரோதியின் தவறான போதனையால் அவர்களது செவிகள் மந்தமாக்கப்பட்டுள்ளன.

**ஒரு புது சிருஷ்டியாக ஆவது எப்படி ?**

ஆகவே, இயேசுவோடு ஐக்கியமாவதற்கான தேவனுடைய கிருபை நிறைந்த அழைப்பிதழுக்கு நாம் என்ன செய்யவேண்டும் ? கேட்கும் செவியைப் பெற்றிருப்போர்க்கு இதுவே நற்செய்தி.'' தேவ குடும்பத்திற்குள் திரும்பிவருவதற்கு அவர் என்னை அழைத்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், என் அபூரணங்களை மூடுவதற்காக அவர் ஏற்பாடு

செய்திருக்கிறார். மேலும் கிறிஸ்துவின் சிந்தையை அடைந்திருந்து, அவரது அடிச்சுவடுகளில் நடக்க விரும்புவோர்க்கு தற்போது ஒரு விசேஷித்த அழைப்பிதழ் இருக்கிறது என்று அறிவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஏற்பாட்டை நான் மகிழ்ச்சியுடன் பயன்படுத்துகிறேன். இந்த அழைப்பிதழுக்கு இணக்கமாக நான் என்னை ஒரு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கிறேன் என்று நாம் கூறுகிறோம்''.

இதை நாம் செய்திருக்கும்போது, நாம் மனமாற்றம் அடைந்திருக்கிறோம். எந்த வழியில் ? பாவ வழியிலிருந்தும், நம் சொந்த சித்தத்திலிருந்தும் திரும்பி, நீதியின் வழியில் நடக்கிறோம். இதுவே மாற்றும் செயல்முறையாகும்.

தேவனுக்கு ஜீவ பலியாகும்படிக்கு அர்ப்பணிப்பு செய்வதே நாம் எடுக்கவேண்டிய அடுத்த படியாகும். தேவனிடத்தில் நம் அனைத்தையும் அர்ப்பணிப்பது என்பது நமக்குரிய எல்லாவற்றையும் உள்ளடக்கினதாயுள்ளது. அதாவது, மனித தன் முனைப்பு(the human ego), தனித்தன்மை (personality) போன்ற நம்முடையவை மற்றும் அதன் நம்பிக்கைகள், எந்த வடிவிலும் எந்த வகையிலும் எதிர்காலத்துக்காக தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்–பட்டிருக்கின்றன. தேவனிடத்திலான இந்த அர்ப்பணிப்பில், அனைத்தும் உள்ளடக்கம். இது நம்மை புதுசிருஷ்டிகளாக்கினதா ? இல்லை. ஆனால் அந்த ஸ்தானத்துக்கு நம்மைத் தகுதிப்படுத்தும் வழியில் இது நடத்துகிறது. இதற்கடுத்த கட்டம் என்ன ? இயேசுவின் புண்ணியத்தை பயன்படுத்துவதே அடுத்த படியாகும். திருமண வஸ்திரமாக நம்மீது அணிந்து, நம் அபூரணங்களை மூடுதல். இது எதற்கு நமக்கு பயன்படுகிறது ? இது தேவன் நம்மை ஏற்கும்படி செய்கிறது. நம் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலிகளாக நம் புத்தியுள்ள ஆராதனையை ஒப்புவிக்கும்படி அப்போஸ்தலர் நமக்கு ஆலோசனை கூறுகிறார்– ரோமர் 12:1.

நாம் கொடுப்பதையும் அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் சுட்டிக்காட்டுவதே வரிசைப்படி நிகழும் அடுத்த காரியமாகும், பரிசுத்தஆவியில் நம்மை ஜெநிப்பிக்குதல் மூலம் அவர் செய்கிறார். இது எதை அர்த்தப்படுத்துகிறது என்று அறிய நமக்கு போதுமான ஞானமில்லை. சரீரத்தின் தலையாக இயேசுகிறிஸ்துவை தேவன் முன்குறித்தார். மேலும் அந்த சரீரத்தின் அங்கங்களாகும்படி, ஒரு வகுப்பாராக நம்மையும் அவர் முன்னறிந்திருக்கிறார். தற்போது தேவையான நிபந்தனைகளின்கீழ் வருவதன் மூலம், இந்த வகுப்பின் அங்கங்களாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். நம் சித்தத்தை சரணாகதியடையச்செய்தது உண்மையானதே என்று காண்பிக்க, நாம் நமது அர்ப்பணிப்பு மற்றும் உண்மைத்தன்மையைக் காண்பிக்கவேண்டும். இதை, சத்தியத்துடனான நம் தொடர்பை செயல்படுத்துவதன்மூலம் நாம் செய்கிறோம். நாம் தவற்றில் இருப்போமானால் நாம் காரியத்தை சீர்தூக்கிப்பார்த்து, முடிவெடுப்பதைப் பொறுத்தே நம் உண்மைத்தன்மையானது தீர்மானிக்கப்படும். நாம் மெதுவாக விஷயத்தை தீர்மானிப்போமானால், நாம் கொஞ்சம் மழுப்புகிறோம் என்று இதற்குஅர்த்தமாகிறது. சத்தியம் மற்றும் தவறுக்கிடையிலான விஷயத்தை துரிதமாய் தீர்மானிப்போமானால், நாம் தேவசித்தத்துக்கும், அவரது சத்தியத்துக்கும் உண்மையாயிருக்கிறோம் என்று அர்த்தமாகும், இவ்வாறு, நாம் ஒரு ராஜரீகக் குழந்தையாக அவரை அதிகமாகப் பிரியப்படுத்துகிறோம். நாம் விஷயத்தை காலதாமதமாக முடிவுசெய்வோமானால், அவர் நம்மை துண்டித்துவிடாமல், ஒருவேளை சில சிட்சைகளை நமக்குத் தரலாம், ஏனெனில் நாம் கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறோம்.

**புது சிருஷ்டி எப்படி வளர்ச்சியடைகிறது**

ஒரு சித்திரத்தில், நாம் இன்னும் பிறக்காதவர்களாக, கருநிலையிலுள்ளோராக நாம் குறிப்பிடப்படுகிறோம். மற்றொரு சித்திரத்தில், குழந்தைகளாக, பூரண வயதை இன்னும் எட்டாதவர்களாக, கிருபையிலும் அறிவிலும் குணாதிசயத்திலும் வளர்கிறவர்களாய் காண்பிக்கப்படுகிறோம். ஒவ்வொரு சித்திரமும் மிக அழகாய் இருந்தாலும், அவைகளை நாம் கலக்கமுடியாது. இன்னும் பிறவாத குழந்தை அறிவு போன்றவற்றில் வளர்வதை நம்மால் கற்பனைசெய்ய முடிவதில்லை. அல்லது ஒரு கரு, பூரண மனிதத்துவத்துக்கு வளர்ச்சியடைவதை நாம் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனித குழந்தையும் வளரவேண்டும் என்பதை கருநிலையைக் காட்டும் சித்திரத்திலிருந்து நாம் புரிந்துகொள்கிறோம். அவ்வாறு அது வளருவது, போஷாக்கு எடுப்பதைச் சார்ந்துள்ளது. சில அசம்பாவிதம் நிகழுமானால், அந்த கரு மரிக்கக்கூடும்; குறைபாடாய் கர்ப்பந் தரித்திருக்குமானால், அந்த கரு ஒருக்காலும் ஜீவனுக்குள் கொண்டுவரப்பட முடியாது. நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளான அத்தருணத்திலிருந்து, நாம் புதுசிந்தையை வளர்க்கத் துவங்கினதை காண்கிறோம். எப்படி ஒரு தாய் ஒரு குழந்தையை கர்ப்பந்தரிக்குமுன் அதே நபராயிருந்தாரோ, அதுபோலவே புது சித்தம் வளர்ச்சியடையுமுன்பு அதே மூளைஇருந்தது, அதே சரீரம் இருந்தது.

வேறொரு கண்ணோட்டத்தில் இப்பாடத்தை நாம் ஆராய்வோம். இந்த புதுசிருஷ்டி ஆளும் வல்லமையாயிருப்பதால், தேவன் இதை மட்டுமே அங்கீகரிக்கிறார், அதை நாமும் உணர்ந்துகொண்டு இந்த அழிவுக்குரிய சரீரத்தை கட்டுப்படுத்துகிறோம். புது சிருஷ்டி ஏன் கட்டுப்பாட்டை அடைகிறது ? ஏனெனில் சித்தமானது மனித ஆர்வத்திலிருந்து தேவ சித்தத்துக்கு மாற்றப்படுகிறது. இப்போது புதுசிருஷ்டிகளாக தேவ சித்தமே நம் சித்தமாகிறது. நம் பூமிக்குரிய உரிமைகளை விட்டுவிட்டபடியால் இந்த சரீரத்தைக் கட்டுப்படுத்த நமக்கு முழு உரிமைகள் உண்டு. தேவன் அந்த பலியை ஏற்றுக்கொண்டபடியால், புதுசிருஷ்டியானது தெய்வீக சித்தத்துக்கு இணங்க, சரீரத்தை

கட்டுப்படுத்துவதில் உண்மையாய் இருக்கவேண்டும். இதுமுதற்கொண்டு, இந்த அழிவுக்குரிய சரீரம் கீழ்ப்படுத்தப்படுவதை நாம் பார்க்கவேண்டும். நாம் அதை இரக்கமற்ற முறையில் நடத்துகிறோம் என்று சிலர் கூறலாம். ஆனால் தேவனுடைய தரநிலையிலிருந்து பார்க்கும்போது, தேவ சித்தம் செய்வதற்காக கூடுமானவரை ஞானமாய் அதை நடத்துகிறோம். சில பெரிய வேலையை மேற்கொள்வது தேவ சித்தமாக இருக்குமானால் அந்த வேலைக்கு ஏற்றவாறு சரீரத்தை பயிற்சி செய்வதில் நிச்சயமாக ஈடுபடுத்தி விடுவோம்.

நடைமுறையில் அழிவுக்குரிய சரீரத்திடம் புதுசிருஷ்டி கூறும் ; ''தற்காலிகமாக மட்டுமே நீ என் சரீரமாக இருக்கிறாய், நான் புது சிருஷ்டி, தேவன் நிமித்தமாக நான் எந்தளவு கீழ்ப்படிகிறேன் என்று நான் காணும்பொருட்டு, தேவ ஊழியத்திற்கு உன்னை பயன்படுத்த விரும்புகிறேன்''. அதற்கு பழைய சிருஷ்டி, ''எனக்கு சில உரிமைகள் உண்டு'' என்று கூறும். புது சிருஷ்டியோ அதற்கு பதிலுரையாக; ''உனக்கு எந்த உரிமையும் கிடையாது, நீ என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று என் நிதானிப்பை நான் உபயோகிப்பேன்'' என்று கூறும். புதிய சிருஷ்டி பழைய சிருஷ்டிக்கு அடிபணியுமானால், பழைய சிருஷ்டி பின்னாளில் தன் சொந்த குறிக்கோள்கள் மற்றும் திட்டங்களில் முன்னேற்றமடையும். இதனால் புதுசிருஷ்டி தைரியத்திலும் பலத்திலும் மற்றும் எல்லாவற்றிலும் மெலிந்து, பலவீனமாகிவிடும். பழைய சிருஷ்டியின் நலன்கள் எல்லாவற்றையும் புதுசிருஷ்டி கட்டுப்படுத்தவேண்டும், தேவ சித்தத்திற்காக பலிசெலுத்தப்படவேண்டிய அனைத்தையும் பலிசெலுத்த வேண்டும்.

**ஆளுமை ஆத்துமாவை உருவாக்குகிறது**

இதை நாம் எவ்வளவு அதிகமாக செய்கிறோமோ அந்தளவுக்கு ஆவிக்குரிய வகையில் நாம் பலப்படுகிறோம். ஆவிக்குரிய வகையில் நாம் பலப்படும்போது, அவ்வளவு அதிகமாக நம் மாறுதலுக்கு நாம் தயாராகிறோம். நம் மாறுதல் என்றால் என்ன ? உயிர்த்தெழுதலில் அடையும் ஆவிக்குரிய பிறப்பே அம்மாறுதலாகும். இந்த பழைய சரீரத்தின் ஒருஅணுகூட புதிய நிலைமைக்குள் செல்வதில்லை. அப்படியானால் புதிய நிலைக்கு செல்வது எது ? புதுசிருஷ்டியே செல்லும். புது சிருஷ்டி என்றால் என்ன ? இது அழிவுக்குரிய சரீரத்தில் ஜீவிக்கும் தன் முனைப்பாயிருந்து, இயற்கையான அப்பத்தினால் உணவளிக்கப்படாமல், தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் போஷிக்கப்படுகிறது.

தற்காலத்தில் தேவன் புதுசிருஷ்டிகள் செய்வதற்கென வேலையை வைத்திருக்கிறாரென்றால், இந்த சரீரத்திற்கு நியாயமான அக்கறை காண்பிக்கவேண்டும். சரீரத்தை தவறாகப் பயன்படுத்துவது, தேவசித்தத்துக்கு இணக்கமாக இருக்காது. சரீரம் புது சிருஷ்டியின் உடைமையாக மாறிவிட்டது. அந்த சரீரத்தை புதுசிருஷ்டி தன் ஆதிக்க கட்டுப்பாட்டிற்குள் எடுக்கவேண்டும். தன்முனைப்பு, தனித்தன்மை, ஒரு ஜீவி இல்லாமல் ஒரு ஆவிக்குரிய சரீரம் ஒரு ஆத்துமாவாக இருக்கமுடியாது, பூமிக்குரிய சரீரத்தைப் போலவே. தன் முனைப்பு, தனித்தன்மையே ஆத்துமாவை உருவாக்குகிறது. வெறுமனே 150 பவுண்டுகள்(68 கிலோ) அல்லது அதற்கு மேற்பட்ட பொருள் ஆத்துமாவை உருவாக்காது.

தகப்பனிடமிருந்து குழந்தையினிடத்திற்கு ஆத்துமா வருகிறது. ஆதாமும் ஏவாளும் தங்கள் குழந்தைகளுக்கு ஆத்துமாவைக் கொடுத்தனர். அவ்வாறே தேவன் ஆதியில் கொடுத்த அந்த ஜீவப்பொறியானது, தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. அந்த ஆத்துமா அல்லது ஜீவப்பொறி எடுத்துச்செல்லப்பட்டு, உயிர்த்தெழுதலில் புதிய ஆத்துமாவாக ஆகிறது. தேவன் எப்பொழுதும் அங்கீகரித்து, அதன் எல்லா வளர்ச்சியிலும் பாதுகாக்கும் இந்த ஜீவிப்பொறியானது, அதனுடன் முழுமையாக இணக்கத்தோடு இருக்கும் ஒரு புதிய சரீரத்திற்கு மாற்றப்படவேண்டும். புதிய சிந்தைக்கும் புதிய உடலுக்குமிடையே எந்த முரண்பாடும், இசைவற்ற தன்மையும் இருக்காது. தற்போது புதிய சிந்தை மிக பலமாய் வளருமானால், அது பழைய சரீரத்தில் அதிக கடினத்தையும் முரண்பாட்டையும் அடைவதோடு, புதிய சரீரத்துக்கான அதிக விருப்பத்தையும் பெற்றிருக்கும்.

**இடமாற்ற செயல்முறை தெரிவதில்லை**

எப்படி இந்த புதிய ஜீவியம் புதிய சரீரத்துக்கு மாற்றப்படும் என்று எங்களுக்கு உங்களால் விளக்கமுடியுமா ? நம்மால் முடியாது. நம் கர்த்தராகிய இயேசுவின் விஷயத்தில், லோகோஸ் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக, ஆவிக்குரிய நிலைமையை விட்டுவிட்டு, பூமிக்குரிய நிலைமைகளுக்குள் வந்து, பூமிக்குரிய நிலைகளில் , ஒரு ஆளுமையாக, தன்முனைப்பாக, மனிதனாக ஆனார் என்ற விளக்கத்தை நாம் பெற்றிருக்கிறோம். உலகிற்கு வந்து மரித்து, மீண்டும் பரலோகத்திற்கு சென்ற இவரே மீண்டும் வருகிறார் என்று நாம் வேத வசனங்களிலிருந்து அறிகிறோம். அதே தன்முனைப்பு(ego), தன் குணாதிசயத்தையும் அதன் வல்லமையையும் வேறுபட்ட சரீரத்துக்கேற்றவாறு மாற்றியிருக்கிறது. ஆரம்பத்தில் இது ஒரு ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றிருந்தது, அதன்பிறகு மனித சரீரத்தினை அடைந்திருந்தது, தற்போதோ எல்லாவற்றிற்கும் மேலான தெய்வீக சரீரத்தை உடையதாயுள்ளது. ஆனால் தன்முனைப்பும்(ego) தனித்தன்மையும்(personality) இந்த எல்லா சரீரங்களிலும் நிலைத்திருக்கிறது.

நம்முடைய தன்முனைப்பு மற்றும் தனித்தன்மை, இந்த பூமிக்குரிய சரீரத்திலிருந்து கடந்து, புதிய சரீரத்துக்கு தரப்படவேண்டும். இதை செய்யக்கூடிய வல்லமை தெய்வீக வல்லமையாக இருக்கிறது. எதனால் முதல் மனிதன் ஒரு ஆத்துமாவாக உண்டாக்கப்பட்டார் என்று யாராகிலும் விளக்கமுடியுமானால், எப்படி புது சிருஷ்டியினிடத்தில் நிகழும் என்று ஒருவேளை நம்மால் விளக்கமுடியும். அல்லது கோதுமை முளையை எது வளரச்செய்கிறது என்று யாராகிலும் விளக்க

முடியுமானால் புது சிருஷ்டி எப்படி இந்த வித்தைப் பெற்றிருக்கிறது, எப்படி அது வளரும் என்று நாம் விளக்கமுடியும். புது சிருஷ்டி மட்டுமல்ல, பொதுவான உலக ஜனங்களின் உயிர்த்தெழுதலின் முழு விஷயத்திலும் தேவனுடைய வல்லமையையே நம்பவேண்டும்.

தெய்வீக வல்லமையை யார் சந்தேகித்தாலும் அவர்களால் உயிர்த்தெழுதலை நம்ப முடியாது. உதாரணமாக, மோசே அல்லது ஆபிரகாம் அல்லது கடந்த காலத்தில் வாழ்ந்த வேறு யாராவது ஒருவர், தன்னை அறிந்துகொள்ளவும், வேதாகமத்தில் உள்ள தனது வாழ்க்கை சரித்திரத்தைப் படிக்கவும், அதில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் உண்மை என்பதை நினைவில் கொள்ளவும், எப்படி உயிர்ப்பிக்கப்பட முடியும் என்பதை நாம் கற்பனை செய்த பார்க்கமுடியாது. எப்படி இது நடக்கமுடியும் என தேவன் ஒருவரே அறிவார். தேவன் இதைக் கூறியிருப்பதால் நாம் இதை நம்புகிறோம். எப்படி இதைச் செய்வது என்று நாம் அறிந்திருந்தோமானால், ஒருவேளை உயிர்த்தெழுதலை நமக்கு நாமே ஏற்படுத்த முடியும்.

**ஒரு பயனுள்ள விளக்கம்**

ஒரு மனிதன் மனித மட்டத்திற்கு உயிர்த்தெழுப்பப்பட்டு, அவரை புதிய மனித சரீரத்திற்கு கொண்டுவருதலை எளிதாகப் புரிந்துகொள்வது போலவே, புது சிருஷ்டி, புதிய ஆத்துமா அதன் புதிய சரீரத்திற்குள் எப்படி கொண்டுவரப்படமுடியும் என்பதையும் புரிந்துகொள்ளலாம். புதிய சிருஷ்டியே புதிய சரீரத்தை அடைகிறது. நாம் நம் ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அதன் செயல்முறைகள் அனைத்தையும் நாம் அறிந்துகொள்வோம். ஏனெனில் நாம் ஆவிக்குரிய சரீரங்களைப் பெறும்பொழுது, நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வோம் – 1கொரிந் 13:12.

ஆனாலும் இதற்கிடையில் நாம் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவும்படியாக, விளக்கங்களை நாம் கண்டடைய முடியும். உதாரணமாக, ஒலிப்பதிவுக் கருவியைக் கொண்டு(phonograph) பதிவுசெய்தலை எடுத்துக்கொள்வோம். வாயிலிருந்து ஏதோஒன்று வெளியேறி, மெழுகு உருளையில் சிறிய உள்தள்ளுதலை ஏற்படுத்துகிறது, பின்னர் அந்த மெழுகு சிலிண்டரிலிருந்து பேச்சாளரின் குரல் மீண்டும் உருவாக்கப்படுகிறது. இப்போது, மனிதக்குரலை எப்படி மீண்டும் உருவாக்குவது என்று நமக்குத் தெரிந்தால், தேவன் தம் எல்லையற்ற வல்லமையால், நமது மூளையின் சுழற்சிகளால் பதிவுசெய்யப்பட்ட அனைத்தையும் எவ்வாறு பாதுகாக்கப்பட முடியும் என்பதையும், எதிர்காலத்தில் இவை எவ்வாறு முற்றிலும் பாதுகாக்கப்படக்கூடும் என்பதையும், அதாவது எதிர்காலத்தில் நம்மை நாமே அறியக்கூடிய அனைத்தையும் பற்றிய ஒரு சிறிய விளக்கத்தை இது நமக்கு அளிக்கிறது. நாம் உடல்எடை எவ்வளவு இருக்கிறோம் என்ற வித்தியாசங்களைக்கொண்டோ அல்லது நம் தாடியின் வித்தியாசங்களைக் கொண்டோ நம்மை நாமே அறியமுடியாது. நம் மனதிலுள்ளவற்றிலிருந்து நம்மை நாம் அறிகிறோம். ஆனால் நம் பகுத்தறிவு போய்விட்டால் நம்மை நாமே அறியமாட்டோம்.

தேவன் நம்மை புதுசிருஷ்டிகளாக்கியிருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ளவராயிருக்கிறபடியால் இதை எப்படி செய்வது என்று அறிவார். அவருடைய ஞானத்தின் நீளம், ஆழம், உயரம், அகலத்தை எவ்வளவு அதிகம் அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக அவர் நமக்கு கூறியிருக்கிறவைகளை எப்படி மதித்துணர்வது என்றும் நாம் அறிவோம், அவ்வளவு அதிகமாக அவரிடத்தில் முழு பற்றுறுதியை நாம் வைத்திருப்போம். தேவன் உயிர்த்தெழுதலை வாக்குறுதி அளிக்கவேண்டும் என்பது ஞானமான முட்டாள்–தனமாயிருக்கிறது. அவைகள் உலகத்துக்கு பைத்தியமாய் இருப்பதனால், அவர்கள் அதைப் புரிந்துகொள்ளமாட்டார்கள். உயிர்த்தெழுதலை அவர்களால் நம்பமுடியாது, ஆகவே நம் விசுவாசத்தின் மூலமாக நாம் அடையும் மகிழ்ச்சியை அவர்களால் அடையமுடியாது.

–––––––

**R 5560**

## இயேசு அடைந்த பரிகாசசோதனைகள்

## MOCK TRIALS OF JESUS

ஆதார வசனங்கள் : மத்தேயு 26:57–68.

திறவுகோல் வசனம் : ஏசாயா 53: 7 **"...அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்"**

நாகரீகமான அல்லது புறஜாதியான ஒவ்வொரு பகுத்தறிவு ஜீவிக்கும் நீதி என்பது மனதின் பண்பு நலனாக இருந்து, இயல்பாகவும் முறையாகவும் தன்னைப் பாராட்டுகிறது. ஆகவே ஒவ்வொரு தேசமும் தன்தன் சட்டப் புத்தகங்களில் நீதியின் பிரமாணங்களை வைத்திருக்க முயற்சிகளை செய்கின்றன. கிரேக்க நகர் மாநிலமாகிய லைகர்கஸ் மற்றும் சீசர்களையும் உள்ளடக்கிய உலகின் சட்டங்களில் பெரும்பாலானவை, அதிக ஞானம் மற்றும் அதிக நீதியை வெளிப்படுத்தியிருப்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

ஆனால் தேவன் தாமே சீனாய் மலையில் மோசேயின் கரங்களில் கொடுத்த யூதருக்கான பிரமாணம், உயரிய ஸ்தானத்தை முறையாகக் கோருகிறது. மேலும் கிறிஸ்தவத்தை சரியாக அங்கீகரிப்பதாகக் கூறும் அனைத்து தேசங்களின் சட்டங்களும், உயர்ந்த தளத்தில் நீதியின் கொள்கைகளை பிரதிநிதித்துவப்படுத்த முயல்கின்றன. ஆயினும் இந்தச் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும்போதும், தனிப்பட்ட வழக்குகளுக்கு அவற்றைப் பொருத்தும்போதும், வழக்கின் சூழ்நிலைகளையும், நிலைமைகளையும் காரணங்காட்டி சட்டத்தை மீறுவதும், நீதியின் கொள்கைகளை மீறுவதும்

அவசியமாகிறது என்று கோருவது, சட்டங்களிலிருந்தும் நீதியின் கொள்கைகளிலிருந்தும் விலகிச்செல்லவும், வருத்தம் தெரிவிப்பதுமான மனப்பான்மையை வெளிப்படுத்துவதை எவ்விடத்திலும் நாம் காண்கிறோம்.

யூத நீதிமன்றத்தாலும், யூதருடைய பிரமாணத்தை மீறியதிலும் இயேசுவுக்கு அநியாயமாக தண்டனை கொடுத்த சம்பவம், நம்மை ஆச்சரியப்படுத்தவோ அல்லது மற்ற நீதிமன்றங்களின் எண்ணிலடங்கா வழக்குகளில் என்ன நேரிட்டதோ அதிலிருந்து வேறுபட்டதாகவோ கருதப்படக்கூடாது.

**சட்ட விரோதமான கைது**

இயேசு கைதுசெய்யப்பட்டது பிலாத்துவின் கட்டளையினாலோ அல்லது ஏரோதுவினாலோ அல்லது அவர்களுடைய போர்வீரர்களாலோ அல்ல. யூதத்துவத்துக்கு எது சிறந்த நன்மை பயக்கும் என்று அவர்கள் எண்ணியிருந்தவைகளுக்கும், அவர்களுடைய திட்டங்களுக்கும், திட்டப்பணிகளுக்கும் இயேசுவின் ஜீவியமும் ஊழியமும் விரோதமாயிருப்பதாக தீர்மானித்த பிரதான ஆசாரியரும் அவரது கூட்டாளிகளுமே அவர் கைதுசெய்யப்பட காரணமாயிருந்தனர். இயேசுவை கொலைசெய்ய முன்கூட்டியே சதித்திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் எல்லா கொலைகாரர்களும் செய்வதைப்போல் இந்த கொலைகாரர்களும் தங்கள் நடத்தைக்கு காரணம் தேடினார்கள். மேலும் அரசியல்வாதிகளாக இருந்து, தங்களைவிட மென்மையான மனசாட்சியுடைய மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்து, ஒரு வெளிப்புறமான வடிவத்தை அல்லது நீதியின் சாயலையும் நாடினர்.

ஆலயத்திலும் அதன் வளாகங்களிலும் காவல்காரர்களாகப் பணியாற்றிய பலர், ஆசாரியரின் பொறுப்பின்கீழ் இருந்தனர். இவர்கள் பிரதான ஆசாரியருக்கு ஊழியர்களாய் இருந்து, ஆயுதங்களை தரித்திருந்ததோடு, பட்டயங்களையும் விளக்குகளையும் பிடித்திருந்து, இந்த குறிப்பிட்ட இரவில், இயேசு வழக்கம்போல் பெத்தானியாவுக்கு செல்ல நோக்கம் கொண்டிருக்கவில்லை. மாறாக, கெத்செமனேயில் உள்ள ஒலிவமரத்தோட்டம் அல்லது பூங்காவில் அவரது சீஷர்களோடு ஒன்றுகூட தீர்மானித்திருந்ததை முன்கூட்டியே அறிந்திருந்த யூதாஸைப் பின்தொடர்ந்தனர்.

இயேசுவை அவர்கள், வயது முதிர்ந்த பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் வீட்டிற்கு நேரடியாகக் கொண்டு சென்றனர். அவருக்குப் பதிலாக அவருடைய மருமகனாயிருந்த காய்பா பதவி வகித்துவந்தார். இயேசுவை விசாரிக்க முயற்சித்து சிறிதளவே வெற்றியடைந்த அன்னா, அவரது வளாகத்தில் இணைந்திருந்த காய்பாவின் வீட்டில் அவரை ஒப்படைத்தார். அங்கே ஏறத்தாழ அதிகாலை 3மணி வேளையில் ஆலோசனைச் சங்கம் கூடினது.

இயேசுவின் மரணத்தைக் குறித்த சதித்திட்டம் ஆழமாக போடப்பட்டிருந்தது. யூதாஸ் இயேசுவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பஸ்கா இராப்போஜனத்தில் விட்டுச்சென்ற நேரத்திற்கும், இந்த சோதனையின் வேளைக்கும் இடையே இருந்த பலமணி நேரங்கள், பட்டணம் முழுவதும் பல்வேறு வீடுகளில் ஆலோசனை சங்கத்தார் ஒன்றுகூடுவதில் செலவிடப்பட்டன. “ மனிதர் ஒருபோதும் பேசியிராத வார்த்தைகளை அவர் பேசி” ஜனங்களுக்கு அவர் கற்பித்ததாலும், ஜனங்களுக்கான அவரது போதனை, சதுசேயர் மற்றும் பரிசேயரது அதிகாரத்தையும், மூப்பர்களுடைய பாரம்பரியங்களையும் பலவீனப்படுத்தியதாலும், அவரைக் கொலைசெய்வதற்கான இந்த எல்லா ஏற்பாடுகளையும் நியாயப்படுத்தும் அளவுக்கு, நிலைமைகள் தீவிரமானதாக கருதப்பட்டது – யோவா 7:46; மத் 26: 55.

மத குருமார்களின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக, அறியாமை மற்றும் மூட நம்பிக்கை அவசியம் என்பது மத போதனைகளின் தவறான கோட்பாடாகும். இப்படியாக சத்தியத்தை தவறு எப்பொழுதும் பகைத்திருக்கிறது, அவ்வாறே வெளிச்சத்தை இருள் எப்பொழுதும் பகைத்திருக்கிறது. இயேசுவை குற்றத்தீர்ப்பிட்டது வெளிச்சத்தின்மீது இருள் மற்றொருமுறை மேற்கொண்டதாக மட்டுமே இருந்தாலும், தோற்றத்தில் மட்டுமே வெற்றிபெற்றிருந்தது. ஏனெனில் தேவனுடைய திட்டம் இவ்வாறு நிறைவேற்றப்பட்டது. இறுதியில் பாவம், சாத்தான், மரணம் அகற்றப்பட்டு, நீதியும் சத்தியமும் உலகமுழுவதும் நித்தியத்துக்கும் ஸ்தாபிக்கப்படும் என்ற பலனுக்காக, பாவத்துக்கான மாபெரும் ஒப்புரவாக்குதல் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது .

**நியாயமற்ற விசாரணை**

ஆலோசனை சங்கம் செல்வாக்குமிக்க 70 யூதர்களைக்கொண்டு ஒரு மத நீதிமன்றமாக அமைக்கப்பட்டிருந்தது. இவர்களின் குரல் ரோம ஆளுநரிடத்தில் சரியான முறையில் பெரும் செல்வாக்குடையதாயிருந்தது. அந்நேரத்தில், ஜீவன் அல்லது மரணத்துக்கான அதிகாரம் இவர்களின் கரங்களிலேயே இருந்தன.

பிரதான ஆசாரியருக்கான அலுவலை காய்பா செய்துவந்ததோடு. குறிப்பிட்ட இந்த வழக்கில் அவர் குற்றம்சாட்டும் வழக்குரைஞராக செயல்பட்டார். ஆலோசனை சங்கத்தைக் கூட்டும்போது, தவறான தகவலை அளிக்க ஊக்குவித்து அல்லது லஞ்சம் கொடுப்பதன்மூலம் சாட்சியங்களை சேகரிப்பதில் அவர் கவனமாயிருந்தார். நிச்சயமாக, இயேசு தீய ஆவிகளின் வல்லமையிலிருந்து விடுவித்திருந்தவர்களில் ஒருவரையும், அல்லது குருடராயிருந்தவர்கள் கண்களை அவர் திறந்திருந்தவர்களில் எவரையும், செவிடரின் காதுகளை அவர் கேட்கச் செய்தவர்களிலிருந்து எவரையும், அல்லது மரண நித்திரையிலிருந்து அவர் எழுப்பியிருந்தவர்களில் எவரையும் ஆலோசனை சங்கத்தின் முன்பாக கொண்டுவர எந்த

முயற்சியும்செய்யவில்லை.உதாரணத்துக்குகூறவேண்டுமானால், லாசருவின் விஷயத்தைக் குறித்து குறிப்பாக பிரதான ஆசாரியன் அறிந்திருந்தார்.ஆனால் அப்படிப்பட்ட சாட்சியத்தை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் நீதிமன்ற வடிவத்தில் வெளிப்படையாக அவரை கொலைசெய்ய குறியாய் இருந்தனர்.

காய்பா சாட்சிகளை அழைத்தான், ஆனால் அவர்களது சாட்சியங்கள் முரண்பட்டிருந்தன. எந்த விஷயமும் நிரூபிக்கப்பட்டதாக கருதப்படுமுன்பாக, குறைந்தது இரண்டு சாட்சியங்களின் சம்மதம் பெறப்படவேண்டும் என்பது யூதருடைய பிரமாணத்தின் ஒருபகுதியாயிருந்தது. இறுதியாக, இயேசு ஆலயத்தை அழித்து அதை மூன்று நாட்களில் மறுபடியும் கட்டுவேன் என்று பேசினதை தாங்கள் கேட்டதாக, இரண்டுபேர் பகுதியளவில் ஒத்துக்கொண்டனர். அவர்கள் இயேசுவை தவறாக புரிந்துகொண்டிருக்கக்கூடும். ஆயினும் அவர்களது சாட்சியங்கள் தண்டனைக்கு அடிப்படையை உண்டாக்க மிகச்சிறியதாயிருந்தன.

கடைசிமுயற்சியாக, இயேசுவிடமிருந்தே நிந்தனையான வார்த்தைகளைப் பெறவும், அதன்மூலம் குற்றவாளி என தீர்க்கப்படவும் காய்பா முயன்றான். இயேசுவிடம் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதில் ஒன்றும் அவர் கூறவில்லை, ஆனால் காய்பா தற்போது ஆச்சரியத்துடன் ''நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா ? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்'' –மத் **26:63**. இக்கேள்விக்கு பதிலளிக்கத் தவறி, மௌனமாயிருக்க இயேசுவால் கூடாதிருந்தது. இவ்வாறு மௌனமாயிருந்தால் இந்த மாபெரும் சத்தியத்தை மறுதலிப்பதோடு, ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக சரியான சாட்சியத்தை அளிப்பதில் தோல்வியுற நேர்ந்திருக்கும். ஆகவே காய்பா எதை விண்ணப்பித்தாரோ, அதில் உண்மையிருப்பதாக கர்த்தர் உறுதியளித்தார்.

இந்த அறிக்கையை தூஷணம் என்று அழைக்கும் வாய்ப்பை பதற்றத்தோடு பற்றிக்கொண்ட காய்பா குதித்தெழுந்தான், இயேசுவோ தொடர்ந்து கூறியதாவது; ''... மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இது முதல் காண்பீர்கள்'' என்றார். இவ்வார்த்தைகளால் பெரும் திகிலுற்ற காய்பா, ஆலோசனை சங்கத்தார் முன்பாக தேவனுடைய பிரதிநிதியாக இருக்கின்றபோது, பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டதை உணர்த்தும்விதமாக, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டார். அவர் ஆலோசனை சங்கத்திடம் திரும்பி வினவியதாவது: ''இவன் தேவதூஷணம் சொன்னான், இனி சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன ? இதோ இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது'', உங்களுடைய தீர்ப்பு என்ன ? என்று கேட்டான். ''அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்'' –மத் **26:65,66.**

இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் நிக்கோதேமு, அரிமத்தானாகிய யோசேப்பு ஆகிய இருவர் மட்டுமே விலகியிருந்தனர். இவர்கள் இருவரும் இயேசுவின்மீது பெரிதும் மதிப்புவைக்க கற்றிருந்தனர். ஆனால் அவர்கள் என்ன வல்லமையை அல்லது செல்வாக்கைப் பெற்றிருந்தனர் ? இரவுவேளையில் நீதிமன்றம் கூடி எவருக்கும் மரணத்தீர்ப்பளிப்பதை சட்டம் தடைசெய்கிறது என்றுகூறி, இந்த ஆலோசனை சங்கத்தின் விசாரணை சட்டவிரோதமானது என்று அவர்களால் அதிகபட்சமாக உரிமைக்கோரிக்கை எழுப்பமுடியும். இதனால் ஆலோசனை சங்கம் அதன் உத்தியோகப்பூர்வ நடவடிக்கையை பொழுது விடிந்ததும் எடுக்கக் காத்திருந்தபோது, இயேசு பக்கத்து நீதிமன்ற அறையில் காவலில் வைக்கப்பட்டார். இதற்கிடையில், அந்த காத்திருப்புக் கூடத்தில் இயேசு பிரதான ஆசாரியரால் நிந்தனை செய்பவர் மற்றும் தவறானவர் என்று கண்டனம் செய்யப்பட்டார், பிரதான ஆசாரியரின் அரண்மனையில் இருந்தவர்களால் பல்வேறு அவமானங்களுக்கு ஆளானார், பிரதான ஆசாரியன் எதைச்செய்தாலும் அது நியாயமாகவே இருக்கும் என்று இவர்கள் அறியாமையில் எண்ணிக்கொண்டிருந்தனர்.

**தெய்வீக சித்தத்துக்கு ஒப்புவித்தல்**

''நீங்கள் நியாயாதிபதியைக் கொலைசெய்தீர்கள், அவரோ உங்களை எதிர்த்து நிற்கவில்லை'' என்று வேதாகமம் கூறுகிறது. நம் பாடத்தின் திறவுகோல் வசனமும் இதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது, இந்த இரு வசனங்களும் இந்த சோதனைகளில் இயேசுவுக்குப் பொருந்தும். இயேசு தம் வாயைத் திறவாதிருந்தார் என்ற வாக்கியம், அவர் தம் ஜீவனைப் பாதுகாக்க எந்த முயற்சியும் எடுக்காதிருந்ததைக் குறிப்பிடுகிறது. பிதாவின் சித்தத்துக்கு எதிராக தமக்கு எதுவும் நேரிடாது என்று உணர்ந்தவராக, முடிவுகளுக்கு தடைஏற்பட முயற்சிக்காமல், அவர்களது வழிமுறைப்படி நடக்கும்படி மகிழ்ச்சியோடு காரியங்களை அனுமதித்தார்.

மனிதர் ஒருபோதும் பேசாதவைகளைப் பேசின அவருடைய நாவையும், தன் தரப்பு வாதத்தை விரைவாகப் பேசிமுடித்த அவரது புத்திசாலித்தனமான சிந்தையையும் குறித்து யார் ஐயப்படமுடியும் ? இப்படிப்பட்ட வாதத்தைக்கேட்ட காய்பாவும் முழு ஆலோசனைச் சங்கமும் நடுங்கி, அவரைக் கண்டிக்கத் துணியாதிருந்தனர். சத்தியம் முன்வைக்கப்பட வேண்டும் என்று அவசியமாக சொல்லவேண்டியதை மட்டுமே அவர் பேசினார், மேலும் இந்த சத்தியத்தை தவறாக பயன்படுத்தியிருந்த அவருடைய எதிரிகள், அதை நிந்தனையாக்கினர்.

உலகில் முழு நீதியையும், உலகம் சரியாகப் புரிந்துகொள்ளும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது என்று இயேசுவின் பின்னடியார்களுக்கு வேத வசனங்கள் அறிவுறுத்துகின்றன. அவர்களுடைய எஜமானுக்கு ஒப்பாகவே இருக்கிற அவர்களுடைய அனுபவங்களின் பாத்திரம், பரலோக ஞானத்தால் மேற்பார்வையிடப்படுகிறது என்பதையும் அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும். தெய்வீக ஏற்பாட்டுக்கு அவர்கள் கீழ்ப்படிவார்களானால் அவர்களது எல்லா அனுபவங்களும், இறுதியில் அவர்களுடைய உயரிய நலனுக்காகவே செயல்படுவதை கண்டுகொள்வார்கள். ''தேவனை நேசிப்போர்க்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது'' என்று நாம் அறிவோம்.

———————